உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38] சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—79 [இதழ் 12

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி திருக்கோயில்

ஸ்ரீ சனிபகவான்

சனிப்பெயர்ச்சி : கார்த்திகைமீ 13உ வியாழன் இரவு மணி 1 - 47.

30—11—79. (1 - 47 A. M.)

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38 | 10-11-79 | இதழ் 12

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

தாயர் மகவருத்தஞ்
  சற்றுந் தரியார்கள்
ஆயவினைக் கீடா
  அமைத்தாலும் — காயம்
பரிக்குந் துயரமெல்லாம்
  பார்க்கவுனக் கென்றும்
தரிக்குமோ
  சொக்கநா தா.

—சொக்கநாத வெண்பா. 58

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி. அருணைவடிவேல் முதலியார்.

உட்பொருள்

எண்		பக்கம்
1	புனித நீராட்டு	... 501
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 505
3	திருத்தலைச்சங்காடு. திருவலம்புரம் தலச் சிறப்புக்கள்	... 517
4	திருக்கடவூரில் இரண்டு திருவிளையாடல்	... 525
5	சித்திர ஞானபாதம்	... 532
6	செய்திகள்	... 537
7	எதிர்காலம்	... 543
8	பார்வையாளர் குறிப்பு	548

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 38 | சித்தார்த்தி - ஐப்பசி - 10—11—79 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

புனித நீராட்டு

தீர்த்தவிசேடம்

கடல், ஆறு, குளம் போன்றவற்றை வெறும் நீர்நிலைகளாக மட்டும் கருதாது, இவற்றைப் புனிதம் மிக்க தீர்த்தங்களாகவும் கருதி நீராடும் மரபு பாரதநாட்டில் இமயம்முதல் குமரி வரை வாழும் மக்களால் பல்லாயிரம் ஆண்டுகளாக மேற்கொள்ளப்பெற்று வந்திருக்கிறது. கங்கை, காவிரி போன்ற நதிகளின் விவசாயப் பயன்பாட்டை விட, இவற்றின் தீர்த்த விசேடமே இந்நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்பெறுகிறது. சில குறித்த நாட்களில் இத்தகு புனித நீர்நிலைகளில் நீராடுவது, பாபநீக்கத்திற்கு வழிகோலும் என்பது மக்கள் நம்பிக்கையாக வேரூன்றியுள்ளதைக் காணலாம். வேத வழிப்பட்ட இந்திய சமயங்கள் எல்லாவற்றிலுமே தீர்த்தமாடுதல் ஓர் அங்கமாகப் போற்றப்பெற்று வந்துள்ளது. குறிப்பாகத் தென்னாட்டில் தமிழ் மக்களால் இப்புனித நீராடும் மரபு பெருஞ்சிறப்பாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளமை வரலாற்று ஆய்வுகளால் புலனாகின்றன.

இலக்கிய சான்றுகள் :

கடைச்சங்ககால நூலான பரிபாடலில் இளமகளிர்கள் தங்கள் தாயாரோடு சென்று தைத்திங்களில் புனித நீராடினர் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. வைகைநதி பற்றிய இந்நூற்பாடல்கள் மதுரை நகர மக்கள் மேற்கொண்ட புனித நீராடல்கள்பற்றிப் பலவாகிய சுவை மிக்க செய்திகளைத் தருகின்றன. சோழன் கரிகாலன் காலந்தொடங் கிக் காவிரியில் புதுப்புனல்விழா நடைபெற்றுவருகிறது. இன்று இவ் விழா ஆடிப்பெருக்கு எனப் போற்றப்படுகிறது. காவிரிப்பூம்பட்டினத் தில் இருந்த சோமகுண்டம்' சூரியகுண்டம் என்ற நீர்நிலைகளில் நீராடினுல் பிரிந்த கணவனை அடையலாம் எனப் பார்ப்பனத் தோழி 'தேவந்தி' கண்ணகிக்கு உரைப்பதைச் சிலம்பில் காணலாம். மதுரையில் கோவலனைச் சந்தித்த மாடல மறையோன், தான் பொதிகை மலையை வலங்கொண்டு, குமரியந்துறையில் நீராடித் திரும்புவதாகப் பேசுகின்ருன். இவை போன்ற நீராட்டுப் பற்றிய பலவாகிய குறிப்புகளைப் பண்டை இலக்கியங்களில் நிறைவாகக் காணலாம்.

ஒருஅரிய குறிப்பு :

தொல்காப்பிய, சொல்லதிகார உரையில் சேனுவரையர் காட்டும் மேற்கோள் ஒன்று இங்கே நினைவுகூரத்தக்கது. யாத்திரீகன் ஒருவன் ஒரு இல்லத்தின் முன்னின்று, 'குமரியாடிப் போந்தேன் சோறு தம்மின்' என வேண்டுகின்ருன் எங்கிருந்து வருகிருய் என வினவப் படாமலேயே, இரவலன் தான் குமரியாடிப் போந்ததைக் கூறி, உணவு வேண்டுகின்ருன். எனவே தாம் சென்று நீராட இயலாத வர்கள், இவ்வாறு புனிதநீராடி மீண்டவர்களுக்கு உணவு முதலியன நல்கிப் போற்றும் மரபு தமிழ் மக்களின் விழைவினை விளக்குகின்றன. இன்றும் காசி போன்ற புனித இடங்களுக்குச் சென்று, கங்கை போன்ற புண்ணிய நதிகளில் நீராடி மீண்டவர்களை வணங்கிப் போற்றும் மரபு சில இடங்களில் காணப்படுகிறது.

நீராடல் நோக்கு :

இவ்வாருன புனிதநீராட்டுக்கள் உயர்ந்த உள்நோக்கில் அமைந் தன. சிவபெருமானைக் குறிக்குமிடத்து மணிவாசகர் 'தீர்த்தன்' என்ற அரிய சொல்லை ஆள்கிருர். 'ஆர்த்த பிறவித்துயர்கெட நாம், ஆர்த்தாடும் தீர்த்தன்' என்பது திருவெம்பாவைத் தொடர். இறை வனின் திருவருளில் திளைத்தாடுதலே இந்நீராட்டின் உள்ளார்ந்த நோக்கம். மார்கழி நீராட்டுப் பற்றிய திருவெம்பாவைப் பகுதிக்குத் தத்துவ விளக்கம் தரவந்த சான்ருேர் ஒருவர்,

" மலஇருள் உற்று உறங்காமல் மன்னுபரிபாகர் அருள்
சலம் முழுக வருக எனச் செப்பல்திரு வெம்பாவை "

என்று குறித்தமை இங்கே நினைக்கத்தக்கது. இறைவனின் கருணை வெளிப்பாட்டைத் திருவள்ளுவர் 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தில் பேசுதலை இங்கே ஒப்புநோக்கலாம். எனவே புனிதநீராட்டுக்கள் வெறும் புறத்தூய்மை நோக்குடையனமட்டுமன்று; இறையருளில் திளைத்தாடும் உள்நோக்குடையன என்பது விளங்குகின்றது.

புனிதக்காவிரி :

சிவவழிபாட்டு நெறியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்றமூன்றும் இன்றியமையாதன. காசி விசுவேசர், வேளூர் வைத்தியநாதர், மதுரை மீனாட்சி, கடவூர் அபிராமி என மூர்த்திச் சிறப்புக்கள் பல. பிறக்கத் திருவாரூர், தரிசிக்கத் தில்லை, நினைக்கத் திருவருணை, இறக்கக் காசி என்று பல விசேட முடைய நகர்கள் பல, கமலாலயம், சித்தாமிர்தம், காவிரி, கங்கை எனத் தீர்த்தச் சிறப்புடையன பல. தாயுமானுர் இம் மூன்றினும் முறையாக முயல்வாரைச் சிறப்பித்து,

" மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

எனப் போற்றுகின்ருர். இம்மூன்றனுள் இறுதியில் வைத்து எண்ணப்படும் புனித தீர்த்தங்களுள் ஒன்று காவிரி. இக்காவிரியில் மேற்கொள்ளப்பெறும் பல நீராட்டுக்களுள்ளும் மிகவும் புனிதமானதாகக் கருதப்படுவது மாயூரத்தில் ஐப்பசித் திங்கள் இறுதிநாளில் நடைபெறும் ' கடை முழுக்கு ' எனப்பெறும் துலாநீராட்டு.

கடை முழுக்கு :

சிவநிந்தனை செய்த தட்சன் மகளாகப் பிறந்த பாபம் நீங்க உமையம்மை மாயூரத் தலத்தில் மயிலுருக்கொண்டு பெருமானைப் பூசித்தபோது, இறைவனும் காட்சி கொடுத்து ஆண் மயிலுருக்கொண்டு மயூர தாண்டவம் ஆடியதால் மயிலாடுதுறை எனப் பெயர்பெற்றது. இத்தலத்தில் காவிரி துலா மாதம் எனப்படும் ஐப்பசித் திங்களில் தீர்த்தச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. இந்நகரில் வாழ்வோரும், அண்மைச் சிற்றூர் மக்களும் இத்திங்கள் முழுவதும் காவிரியில் இப்புனித நீராட்டை மேற்கொள்ளுகின்றனர். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து தங்கியிருந்து நூற்றுக் கணக்கான பக்தர்கள் திங்கள் முழுவதும் இப்புனித நீராட்டை மேற்கொண்டு வருகின்றனர். ஐப்பசித் திங்கள் இறுதி நாளன்று நடைபெறும் ' தீர்த்தவாரி ' உற்சவமே கடைமுகம் அல்லது கடைமுழுக்கு என்று வழங்கப்பெறு

கிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், துலாக் கட்டத்தில் அமைந்துள்ள ரிஷப தீர்த்தத்தில் கடைமுழுக்காடும் காட்சி மெய்சிலிர்ப்பூட்டும்.

சில ஐதிகங்கள்

மாயூரத்தில், ஐப்பசித்திங்களில் கங்கையே காவிரியோடு இணைந்து பாய்கிறது என்று மக்கள் நம்புகின்றனர். கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற மூன்று புனிதநதிகளும் கடைமுழுக்கன்று, தாங்களே இங்குவந்து காவிரியில் நீராடித் தங்கள் பாபங்களைப் போக்கிக் கொள் கின்றன என்பது ஐதிகம். எனவே, இவ்வாறான புனிதநாளில் நீராடித் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற மக்களின் ஆவலால் இவ்விழா இப்பகுதியில் பெருவிழாவாகத் திகழ்கிறது. தேவாரப் பாடல் பெற்ற இத்தலத்து இறைவர் அருள்மிகு மாயூர நாதரும், அருள்மிகு அஞ்சொல்நாயகியும் எழுந்தருளித் தீர்த்தம் வழங்கியருள்கின்றனர். நோய்நீக்கம், மகப்பேறுபோன்றன இப்புனித நீராட்டின் பலன்களாகப் போற்றப்படுகின்றன. கார்த்திகைத்திங்கள் முதல்நாள் 'முடவன் முழுக்கு' நடைபெறுகிறது. ஊனமுற்ற ஒருவனுக்காக இறைவன் மறுநாளையும் புனித நாளாகக் கொண் டருளினான் என்பர்.

நீராடி உய்வோம் :

இவ்வாறு இறையருளைவேண்டி, தீர்த்தங்களில் நீராடி, புற அழுக்கோடு உயிர் அழுக்காகிய வினைகளையும், அவற்றால் விளையும் பாபங்களையும் நீக்கிக்கொண்டு மக்கள் உய்திபெற வேண்டும் என்பதே இவ்விழாக்களின் நோக்கமாகும். இவ்வாண்டு ஐப்பசித் திங்கள் இறுதிநாளன்று இப்புனித நீராடி இறையருள்பெற்று உய்வார் களாக.

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

— சிவபோகசாரம்,

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

கந்தபுராணத்தின் சிந்தனையாக

வழங்கியருளிய

ஆசியுரை

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

முப்பெரும் புராணங்கள் ;

தமிழில் முப்பெரும் புராணங்கள் உள்ளன. அவை பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்பனவாம். இம்மூன்றையும் இறைவனின் மூன்றுகண்களுக்கு ஒப்பாகச்சொல்வது மரபு. இறைவனது வலக்கண் சூரியன்; இடக்கண் சந்திரன்; நெற்றிக் கண் அக்கினி. ஞாயிறு போன்றது பெரிய புராணம்; திங்களனையது திருவிளையாடற் புராணம்; அக்கினியை ஒத்தது கந்தபுராணம்; இறைவனின் மூக்கண்களும் ஞாயிறு, திங்கள், அக்கினியாக இருந்து இவ்வுலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் தேவையானவற்றைக் கொடுத்துக் காப்பாற்றிவருகிறது.

மூன்று கண்களும் மூன்று புராணங்களும் :

ஞாயிற்றைப் பெரியபுராணத்திற்கும், திங்களைத் திருவிளையாடற் புராணத்திற்கும், அக்கினியைக் கந்தபுராணத்திற்கும் ஒப்பிட்டுக் கூறுவது ஏன்? இதனைச் சிந்தித்துப் பார்த்தால் இவற்றினிடையே சில இயைபுகள் இருப்பதனை உணரலாம்.

ஞாயிறு எங்ஙனம் வெப்பத்தைக்கொடுத்து எல்லா உயிர்களையும் வாழவைக்கிறதோ அதுபோன்று பெரிய புராணமும் திருத்தொண்டர்களை வருத்தி ஆட்கொள்ளும் இறைவனின் அருமைப் பாட்டினை விளக்குகிறது. அநபாய சோழமன்னன் காரணமாகத் தோன்றியது என்பதும், அச்சோழர்கள் சூரிய குலத்தவர்கள் என்பதும் ஒப்புமைப் படுத்திச் சிந்திக்கத்தக்கனவாகும். மேலும் சேக்கிழார் இப்புராணத்தைத் தொடங்கும்பொழுதே,

"இங்கிதன் நாமம்கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற
பொங்கிய இருளை ஏனைப் புற இருள் போக்குகின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்என்பாம்"

என்று செங்கதிரவனை உவமை கூறுவதாலும் இவற்றின் தொடர்பினை உணர்ந்து கொள்ளலாம்.

திங்களைத் திருவிளையாடற் புராணத்தோடு ஒப்பிட்டுக் காணும் பொழுது, சந்திரன் எங்ஙனம் குளிர்ந்த நிலையில் ஒளிதந்து வளம் சேர்க்கின்றானோ அதுபோன்று திருவிளையாடற்புராணமும், பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்தது போன்ற இறைவனின் எளிவந்த கருணையை விளக்குகிறது. மேலும் சந்திர குலத்தவர்களான பாண்டியர்களைப் பற்றியது என்பதும், பாண்டியர்கள் காரணமாக எழுந்தனவே திருவிளையாடல்கள் என்பதும், ஆசிரியர் பரஞ்சோதிமுனிவர் தொடங்கும்பொழுதே 'திங்களணி திருவாலவாய் எம் அண்ணல்,... என்று கூறுவதும் இப்புராணம் சந்திரனுக்கு ஒப்பான புராணம் என்பதை நன்கு உணர்த்துகிறது.

கந்த புராணத்துடன் அக்கினியை ஒப்பிட்டுக்காணும்பொழுது, அக்கினி எங்ஙனம் மிகவும் கடுமையான வெப்பத்தினால் சார்ந்த பொருட்களைச் சுடுகின்றதோ அதுபோன்று கந்தபுராணமும் அசுரர்களின் கொடுமைகளைக் கடுமையாகத் தாக்கி அடக்கிய முருகப்பெருமானின் அருள் விளையாட்டினைக் கூறுகிறது. சேரர்கள் அக்கினி குலத்தவர்களாகப் பேசப்படுவதாலும், சேர நாடு மலை நாடாக விளங்குவதாலும், குன்றுதோறாடல் முருகனுக்கு உரிமையாதலாலும் இதனைச் சேரநாட்டுடன் இயைபுடையதாகக் கொள்ளலாம். கொண்டால் முப்புராணங்களும் மூவேந்தர்களுடனும் தொடர்புடையனவாகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக இறைவனது நெற்றிக்கண்ணினின்றும் தோன்றிய முருகப்பெருமானின் அருள் விளையாடல்களைக் கூறுவதால் இப்புராணம் அக்கினியுடன் மிகுந்த இயைபு உள்ளமையைத் தெளியலாம்.

மூன்று வழியில் முகிழ்த்த புராணங்கள் :

இவ்வுலகில் மக்கள் பலதரப்பட்டவர்களாதலால் ஒவ்வொரு மனிதனுக்கும் அறத்தைக் கூறும்பொழுது ஒரே மாதிரியாகக் கூறுது சிலருக்கு எளிமையாகக் கூறியும், சிலருக்குக் கடுமையாகச் சொல்லி யும், சிலருக்குக் கொடுமையாகத் தண்டனை கொடுத்து விளக்கியும் உணர்த்தவேண்டியுள்ளது. அதைப்போல அறச் செய்திகளைத் திரு விளையாடற் புராணம் எளிமையாயும்,பெரிய புராணம் கடுமையாயும், கந்தபுராணம் மிகக் கடுமையாயும் கூறுகின்றது.

அரியநூலின் பெரியநோக்கம்

ஒவ்வொரு இலக்கியத்திற்கும் ஓர் உயிரோட்டமான கருத்துத் தலைமையான தாகவும் மற்றவை துணை அங்கங்களாகவும் இருப்பதனை நாம் ஊகித்து உணர்ந்துகொள்ளல்வேண்டும். பெரியபுராணத்தைப் பொறுத்தவரையிலும் ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளி என்பன போன்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரும் ஓர் உயரிய குறிக்கோளில்நின்று தொண்டுசெய்தால் இறைவன் அருளைப் பெற லாம் என்பது உயிரோட்டமான கருத்தாக இருப்பதை உணரலாம். மேலும் இந்நூலில் அடியார்களின் பக்திப்பண்பையும் ஆண்டவனின் அருமைப்பாட்டையும் அறிய இடமுளது. எவருக்கும் குறிக்கோ ளுடன் கூடிய வாழ்க்கை முக்கியம் என்பதை வலியுறுத்துவது.

திருவிளையாடற் புராணத்தை எடுத்துக்கொண்டால் ஆண்ட வனின் எளிமைப் பண்பையும் மன்னர்களின் பக்திப்பண்பையும் உணர வாய்ப்புளது.

எல்லோரும் அறம் செய்யலாம்; குறிக்கோளுடன் வாழலாம் என்பதைப் பெரியபுராணமும் இறைவன் எல்லா உயிர்கட்கும் எளிவந்து அருளுவான் என்பதைத் திருவிளையாடற் புராணமும் உயிரோட்டமாய்க்கொண்டுள்ளன. கந்தபுராணம் சொல்லும் உயி ரோட்டமான கருத்து மனிதன் எவனும் தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாமல் இருக்கவேண்டும் என்பதே ஆகும்.

நன்றி எது ?

'நன்றி' என்னும் சொல் 'நன்மை' என்னும் பொருளைத் தரும். திருவள்ளுவரும்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் குறளில் எந்த நல்லசெயலைக் கொன்றாலும் உய்வுண்டு; ஒருவன் தனக்குச் செய்த நன்மையைக் கொன்றால் உய்வேயில்லை என்று கூறுவர். 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்பதற்குப் 'பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும்' என்று பொருள்கண்ட உரையாசிரியர் பரிமேலழகர் பெரிய அறங்களைச் சிதைத்தலாவது — ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல் என்று விளக்கி எழுதுவார்.

ஆனால் 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்பதற்கு இங்ஙனம் கடுமையாகப் பொருள் காண்பது மட்டுமின்றி எளிமையாகவும் பொருள் காணலாம். அன்றாடம் நாம் செய்யும் எத்தனையோ நன்மையான செயல்களைக் கொன்று அதாவது தவிர்த்து வாழ்ந்தாலும் ஒருவன்செய்த நன்மையானசெயலை மறந்து வாழ்வது கேடுதரும் என்றும் பொருள்கூற இடமுண்டு.

கந்த புராணத்தில் தட்சன் சூரபதுமன் இருவருமே நன்றி (சிவபெருமான் அருளிய வரங்களாகிய நன்மையை) மறந்து துன்பம் அடைந்தார்கள். தேவர்கள் தமக்குத் தலைவன் சிவபெருமான்தான் என்பது தெரிந்திருந்துங்கூட, தட்சனை எதிர்க்கத் துணிவு இல்லாமையால் தக்ஷயாகத்தில் கலந்துகொண்டார்கள். ஆதலின் உடந்தைக் குற்றம் செய்தமையால் மிகவும் துன்பம் அடைந்தார்கள். அவர்கள் வரலாற்றினைச் சிறிது சிந்திப்போம்.

தட்சன் யாகம் தருகின்ற பாகம் :

தட்சன் பல ஆண்டுகள் கடிய தவம் இருந்தான். இறைவன் அருளால் நல்வரங்கள் பல பெற்றான். பெருமாட்டியுடன் இறைவன் காட்சி கொடுத்தமையால், 'பெருமாட்டியை நான் திருமகளாகப் பெறவேண்டும்' என்றும், 'தாங்கள் மணமகனாகவந்து என்மகளை மணம்செய்துகொள்ளவேண்டும்' என்றும் வரம்கேட்டுப்பெற்றான். இங்ஙனம் வரம் கொடுத்த வள்ளலையே மதியாது நன்றி மறந்து யாகத்தைச் செய்தமையால் அவன் இறுதியில் தண்டிக்கப்பெற்றான் அவனுக்குச் சிந்திக்கும் ஆற்றலே இல்லாத ஆட்டின் தலையை இறைவன் பொருத்தியருளினார். நன்றி மறந்தமையால் இந்நிலைக்கு ஆளானான் தட்சன் என்று ஆட்டுத் தலையைப் பார்க்கும் தோறும், அவ்வரலாற்றினைக் கேட்கும்தோறும் மக்கள் புரிந்துகொண்டு நன்றி மறவாமல் வாழ வேண்டும் என்பதே இப்புராணத்தின் நோக்கமாகும்.

சூரனின் உணர்வில் சூழும் பல்லோர் :

சூரபதுமனும் பெருமானை நோக்கிப் பல்லாண்டுகாலங்கள் கடுந்தவம் இயற்றி இறைவனின் அருளால் பலவரங்கள் பெற்றான். ஆனால்

இறைவன் தன் முன்பு தோன்றியபொழுது வீடுபேறு வேண்டாது தனக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்ருன். எனக்கு யாராலும் அழிவு கூடாது என்று அவன் கேட்டுக் கொள்ள, இறைவனும் என் சக்தியைத் தவிர உனக்கு வேறு யாராலும் அழிவில்லை என்று திரு வாய் மலர்ந்தருளினுர். சூரன் வரம்பல பெற்ற களிப்பில் இறைவன் அருளிய இச் சொற்களைக் கேட்டானில்லை. அதனுல்தான் பின்னர் வீரவாகுவும் சிங்கமுகன் போன்றவர்களும் பலவாருக எடுத்துச் சொல்லியும் தன் செருக்கு மிகுதியால் கேளாது போகின்ருன். இறுதி யில் முருகனே பேருருவம் எடுத்துக் காட்சி கொடுத்தபொழுது இறை யருளால் நல்லுணர்வு சிறிது தோன்ற, பலவாருகத்துதித்து வணங்க வேண்டும் என்று நினைக்கிருன்.

> " சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
> தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
> ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்காளாகி
> வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்து மானம் ஒன்றே "

என்னும் பாடல் சூரனின் மனமாற்றத்தைத் தெளிவாகக்காட்டுகிறது. எனினும் முருகனின் அருட்காட்சி முடிந்தவுடன் திரும்பவும் பழைய மனநிலைக்கே மாறிவிடுகின்ருன் சூரன். "இவற்காளாகி வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே" எனும் சூரனின் மனப் போக்கு இன்று பல்லோரிடையேயும் இருப்பதனை நாம் காணலாம்.

"மானம்" என்று மாண்பிறந்த ஒன்றைக் கருதிக்கொண்டு நல்லனவற்றைச் சிந்தியாதும் நல்லனவற்றைக் கூறும் பெரியோரை மதியாதும் மனம் போன போக்கில் திசைமாறிப் போய்க்கொண்டிருக் கின்ருேம் என்பதனைப் புரிந்துகொண்டு நல்லநெறியில் வாழ்ந்தால் அதுவே இப்புராணம் படிப்பதன் பயனுகும்.

தேவர்களின் வீழ்வு தெரிவிக்கும் வாழ்வு

தேவர்கள் தமக்குத் தலைவன் சிவபெருமானே என்று தெரிந்தும் தட்சனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து யாகத்தில் கலந்துகொண்டமை யால் பல துன்பங்கள் அடைந்தார்கள். தேவர்கள் தங்கட்குத் தெரியாமையால் இத்தவறினைச் செய்திருந்தால்கூடப் பெருமான் மன்னித்தருளுவார். தெரிந்தே செய்தமையால் அவர்கட்குத் தண் டனை அதிகமாகிறது. அவர்கள் சூரபத்மனிடம் மிகவும் துன்புறுகின் ருர்கள்.

தேவர்கள் இத்தனை ஆண்டுகள் துன்புறவேண்டும் எனும் விதியை மாற்ருத நிலையில் பெருமானும் அவர்கள் அனுபவிக்க

வேண்டிய காலம் முடியும்வரையிலும் பார்வதி திருமணம், முருகனின் திருஅவதாரம், வளர்ச்சி, தூதுபோன்று காலங்களைக் கடத்திச்சென்று சூரனின் வாழ்வு முடியும்காலம்வரை காத்துநின்றே அவனை ஒடுக்கித் தேவர்களைக் காப்பாற்றுகின்றார். இல்லையேல் தேவர்கள் தம்மிடம் வந்து முறையிட்ட மறுவினாடியே சூரனை ஒடுக்கியிருக்கலாம். இறைவன், நியதியைக் கடத்தல் முறையாகாது என்பதையும், அவரவர் செய்த நன்மை தீமைகளை அவரவரும் அனுபவிப்பதனாலேயே நல்லறிவு பெற்று உய்வர் என்பதையும் உணர்த்தும் பொருட்டே இங்ஙனம் நிகழ்த்தினார்.

கந்தபுராணம் கூறும் கருத்துக்கள் மூன்று

இந்தக் கந்தபுராணச் சிந்தனைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியவை மூன்று ஆகும்.

1. நமக்கு ஒருகாலத்தில் நன்மை செய்தவர்களை மறந்துவிடுவதும் அவர்கட்குத் தீங்கு செய்வதும் கூடாது; அங்ஙனம்செய்தால் அறமே முன்னின்று அடக்கி ஒடுக்கும்.

2. நாம் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் நாம் துணைபோகும் காரியம் இழிவானது அல்லது கொடுமையானது என்றால் அது நம்மையும் பாதிக்கும்; நாம் நினைக்கும் நல்ல செயல்களைத் துணிச்சலோடு செயல்படுத்தவும் கொடுமைகளைக்கண்டு எதிர்த்து நின்று போராடவும்வேண்டும்.

3. இறைவன் நடுநிலை தவறாதவன். நல்லவர்களைக் காப்பாற்றவும் தீயவர்களை ஒடுக்கவும் உரிய காலத்தில் அல்லாது முன்னரே வருவதில்லை; இதனை உணர்ந்து வாழவேண்டும்.

ஆண்டுதோறும் கந்த சஷ்டி விழா கொண்டாடுவதோடன்றி, கந்த சஷ்டி நாட்களில் விரதம் மேற்கொண்டு நல்ல பல நூல்களைச் சிந்திக்கவும் வேண்டும். இறைவன் அருள்பெறும் இவைபோன்ற நாட்களில் அருள் நூல்களை ஆழ்ந்து கற்று, அவற்றிலுள்ள நுட்பமான கருத்துக்களைத் தெளிந்து, அவற்றின் வழிநின்று, நம்மிடையே உள்ள குறைகளைப் போக்கிக்கொண்டு நிறைவுடன் வாழ்வோமாக!

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

திருத்தலைச்சங்காடு, திருவலம்புரம் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

திருத்தலைச்சங்காடு

காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்து விளங்கும் இத்தலம் மிகப் பழமையானது. சிலப்பதிகாரத்தில் மாடல மறையவன் இவ்வூரைச் சேர்ந்தவனாகக் குறிக்கப்படுகின்றான்.

தஞ்சை மாவட்டம் மாயூரம் வட்டத்தைச் சார்ந்த இவ்வூர் சோழவள நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 45 வது தலமாகத் திகழ்வது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுள்ள சிறப்புடையது. திருநாவுக்கரசரும் இத்தலத்துக் கோயிலையும், இறைவரையும் குறிப்பிட்டுத் 'தலைச்சங்கைப் பெருங்கோயில் தங்கினர்' எனக்குறித்தருளுகிறார்.

வழி : மாயூரம் தரங்கம்பாடி இரயில்பாதையில் ஆக்கூர் இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 5 கி. மீ. தூரத்தில் உள்ளது. மாயூரத்திலிருந்து ஆக்கூர் வழியாகப் பூம்புகார் செல்லும் பேருந்திலும் சீகாழியிலிருந்து ஆக்கூர் வரும் பேருந்திலும் வந்தால் இத்தலத்தில் இறங்கலாம். பேருந்தில் செல்வதே எளிமையான வழியாகும்.

தலப்பெருமை : திருமால் இத்தலத்திலுள்ள சிவபெருமானைப் பூசித்துப் பாஞ்சசன்யம் என்னும் சங்கினைப் பெற்றார். கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்ற மாடக்கோயிலை உடையது இத்தலம்.

வடமொழியில் இத்தலம் சங்குவனம் சங்காரண்யம் என்று கூறப்படுகிறது. தமிழில் தலைச்செங்கானம், தலைச்செங்காடு, தலைச்சங்காடு எனவும், தலைசை எனவும் வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் இத்தலம் இராஜராஜ வளநாட்டு நாங்கூர்நாட்டுத் தலைச்சங்காடு என்றும், தலையுடையவர் கோயிற் பத்து எனவும் கூறப்படுகிறது. செங்காடு என்னும் பெயரை உடைய ஊர்களில் முதலாவது என்றபொருளில் இவ்வூர் தலைச்செங்காடு என வழங்கப்பெற்றதாகவும் கொள்ளலாம். இத்தலத்திற்கு அருகில் திருமால் இறைவனைப்பூசித்து வலம்புரிச் சங்கு பெற்ற திருவலம்புரம் உள்ளது.

கோயிலமைப்பு : கடைவீதியிலிருந்து கிழக்கே சிறிதுதூரம் வந்தவுடன் நான்கு வீதிகளுக்கு நடுவே திருக்கோயில் அழகுற அமைந்துள்ளதைக் காணலாம். கோயில் கிழக்குநோக்கிய மாடக் கோயில். எதிரே சங்கு தீர்த்தம் உள்ளது. கட்டைக்கோபுரவாயிலைக் கடந்தவுடன் வெளிப்பிராகாரம் எனப்படும் முதல் திருச்சுற்று. சுவாமி சந்நிதியில் கொடிமர விநாயகர் நந்தி பலிபீடங்கள் உள்ளன. எதிரே மாதொரு பாகராய் இறைவன் காட்சிதரும் திருவுருவம் உள்ளது.

வெளிப் பிராகாரத்தில் கன்னி மூலையில் தல விநாயகர் எழுந்தருளியுள்ளார். அருகில் திருமகள் நிலமகள் ஆகிய இரு பெருந் தேவியரோடு ஸ்ரீநிவாசப் பெருமாளின் நின்ற திருக்கோலத் திருவுருவம் உள்ளது. வாயு மூலையில் சிங்கார சுப்பிரமணியர் திருக்கோயில் விளங்குகிறது. வள்ளி தெய்வயானையோடு முருகன் அழகிய திருக்கோலத்தோடு விளங்குகின்றார். முருகனுக்கு வைகாசி விசாக விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வடக்குப் பிராகாரத்தில் ஈசான திசையில் அம்பாள் கோயில் தெற்கு நோக்கி விளங்குகிறது. இறைவனுறையும் மாடக்கோயிலை அடையக் கோயிலின் வலதுபுறம் படிகள் உள்ளன. படிவழியாக ஏறிச் சென்றால் மகாமண்டபத்தை அடையலாம். இம் மண்டபத்தில் நடராசர், சோமாஸ்கந்தர் முதலிய பஞ்சமூர்த்திகள் உள்ளனர். செப்புத் திருமேனிகள் யாவும் வேறிடங் களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பாதுகாப்புக்காக வைக்கப்பட் டுள்ளன.

மகாமண்டபத்தைக் கடந்து கோயிலுக்குள் சென்றால் இரண்டாம் பிராகாரம். பிராகாரம் முழுவதும் திருவலம்புரம் கோயில்போல மண்டப அமைப்பைக்கொண்டது. பிராகாரத்தின் தென்புறம் சமயாசாரியர் திருவுருவங்களும், சண்டேசுரர், திருமால், ஜுரகரேசுரர், காவேரியம்மன், பட்டினத்தார், அகத்தியர் திருவுருவங்களுமுள்ளன. கன்னிமூலையில் வல்லபகணபதி விளங்குகின்றார். அடுத்து மேற்கே பாலசுப்பிரமணியர் விளங்குகிறார்.

கர்ப்பக்கிருகக்கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோற்பவர், வடக்கே பிர்மா துர்க்கை ஆகியோர் உள்ளனர். சுவாமி சந்நிதியில் சிறிய துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. அர்த்தமண்டபம் அதையடுத்து விசாலமான கர்ப்பக்கிருகம் உள்ளது. சுவாமி, சங்குபோன்ற உருண்டையான திருமேனியோடு காட்சி தருகிறார்.

சீர்கொண்ட பாடலீர் செங்கண் வெள்ளேற் றூர்தியீர்
நீர்கொண்டும் பூக்கொண்டும் நீங்காத்தொண்டர் நின்றேத்தத்
தார்கொண்ட நூன்மார்பர் தக்கோர் வாழும் தலைச்சங்கை
ஏர்கொண்ட கோயிலே கோயிலாக இருந்தீரே.

என்று ஞானசம்பந்தர் அருளிய இத்தலத்தேவாரத்திருப்பாடலை ஓதி வழிபட்டு அம்பாள் கோயிலை அடையலாம். அம்பாள் கோயில் பெரிய முன்மண்டபத்தோடு விளங்குகிறது. அதை அடுத்து அர்த்தமண்டபமும் கர்ப்பக்கிருகமும் உள்ளன.

ஸ்ரீ சௌந்தரநாயகி என்பதற்கேற்ற அழகிய திருவுருவோடு அம்மை காட்சிதருகிருர். சிறிய திருவுருவம்.

மூர்த்திகள்: சுவாமி பெயர் அருள்மிகு சங்கருணாதேசுவரர். சங்காரண்யேசுவரர், சங்கவனநாதர் எனவும் வழங்கப்படுகிருர். அம்பாள்பெயர் அருள்மிகு சௌந்தரநாயகி. 'கொடி புல்குமென் சாயல் உமை' என ஞானசம்பந்தர் அம்மையைக்குறித்துப் பாடியுள்ளார். மலைமேலுள்ள வல்லப விநாயகர் காவேரியம்மன் திருவுருவங்கள் தரிசிக்கத்தக்கன.

தலமரம்: புரசு. வடக்குப்பிராகாரத்தில் உள்ளது.

தீர்த்தம்: காவிரி. சங்குதீர்த்தம் திருக்கோயிலின் முன்புறம் உள்ளது.

தீர்த்தச் சிறப்பு: பௌர்ணமி அமாவாசை நாட்களில் நீராடி இத்தலத்து இறைவனையும் இறைவியையும் வழிபடுவோர் இஷ்ட சித்திகள் யாவும் பெறுவர் எனக்கூறப்படுகிறது.

மாடக்கோயில்: தமிழகத்தில் சிவபெருமானுக்குரியதிருக்கோயில்கள் பலவாகும். அவற்றுள் கோச்செங்கட்சோழன் எடுத்த கோயில்கள் எழுபது. அவை பெரும்பாலும் மாடக்கோயில்களாய் விளங்குகின்றன. 'எண்தோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்தான்' என்று கூறுகின்ருர் திருமங்கை ஆழ்வார். தலைச்சங்காடு கோச்செங்கணான் கட்டிய மாடக்கோயிலாகும்.

கல்வெட்டு: இக்கோயிலில் பத்துக் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டன. எல்லாம் சோழர்காலக் கல்வெட்டுக்களே. உத்தமச் சோழன் தாயார் செம்பியன்மாதேவியார் இவ்வூர்ப்பெருங்கோயிலுக்கு வெள்ளிப்பாத்திரங்கள் வழங்கியிருக்கிருர்கள். இவ்வூர் திருவேள்விக்குடி மகாதேவர்க்குப் பூதானம் செய்யப்பட்டது. செயங்கொண்ட நல்லூர்ச் சபையார் மூன்று சிவ ஆலயங்களுக்கு மூன்றுவேலி விளைநிலங்கள் நிபந்தனைமீது தந்தார்கள். காப்பாளர்களுக்கு வீடுகட்ட நான்குவேலி நிலம் கொடுக்கப்பட்டது. அது விற்கக்கூடாது. வெகு காலமாகத் தீர்வை செலுத்தாத தேவஸ்தான நிலத்தைத் திருநாமத்துக் காணியாக மாற்றப்பட்டது. கோயில் நிர்வாகிகள் நிரந்தரமில்லாது ஆண்டுத் திட்டத்திற்கு மாற்றப்பட்டனர். பழைய ஆலயங்கள் கெட்டுப்போக அனுபவபாத்தியங்கொண்டு நிலங்கள் ஸ்திரப்படுத்தப்பட்டன.

திருவலம்புரம்

சோழநாட்டின் தலைநகரமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தின் மேல்பால் காவிரித்தென்கரையில் விளங்குவது திருவலம்புரம். இக்காலத்தில் மேலைப்பெரும்பள்ளம் என இவ்வூர் வழங்கப்படுகிறது. மாயூரத்திலிருந்து பூம்புகார் செல்லும் பேருந்தில் ஏறிக் காவிரியின் கடைமுக அணையில் இறங்கித் தெற்கே 2 கி. மீ. தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம் சீகாழியிலிருந்து காவிரிப் பூம்பட்டினம் செல்லும் பேருந்தில் ஏறி மேலையூரில் இறங்கி தென் மேற்கே 2 கி. மீ. தூரம் சென்றாலும் இத்தலத்தை அடையலாம்.

திருமால் பூசித்து வலம்புரிச்சங்கு பெற்ற தலம். ஏரண்ட முனிவர் திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கி இவ்வூரில் கரையேறினர். ஏரண்டமுனிவர்கோயில் இத்தலத்தில் உள்ளது. திருஞானசம்பந்தருடன் அப்பரடிகள் தலங்கள்தோறும் சென்று வழிபட்ட போது சிவபெருமான் இவ்வூருக்கு அப்பரடிகளை அழைத்துவந்து அருட்காட்சி கொடுத்தனர். மூவர் திருப்பதிகங்களைப் பெற்றதலம், இறைவன் சுயம்புமூர்த்தி. திருமுடியின்மீது பள்ளம் உள்ளது. சாம்பிராணித்தைலம், புனுகுசட்டம்சாத்தப்பெறுகிறது. குவளைசாத்தி அபிஷேகம் செய்யப்படுகிறது.

புகார்நகரில் காவிரியின் வலப்பக்கத்தில் இருப்பதால் இவ்வூர் வலம்புரம் என வழங்கப்பெறுகிறது. பூம்புகாரைச் சூழ இருந்த அகழியாக இவ்வூர் அக்காலத்தில் விளங்கியதால் பெரும்பள்ளம் எனப்பெற்றது. சுந்தரர் தேவாரத்திலும் இவ்வூர் பள்ளமாக இருந்த குறிப்புக் காணப்படுகிறது. பெரும்பள்ளத்தின் கீழ்ப்பகுதி கீழப்பெரும்பள்ளம் எனவும், மேல்பகுதி மேலைப்பெரும்பள்ளம் எனவும் வழங்கப்பெறுகின்றன. திருவலம்புரம் திருக்கோயில் மேலைப்பெரும்பள்ளத்தில் உள்ளது.

கோயிலமைப்பு : திருக்கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. எதிரே இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. திருக்கோயிலின் வாயிலில் தீர்த்தக்கரையில் விநாயகர்கோயில் உள்ளது. அருகே ஏரண்டமுனிவர் வழிபட்ட சிவலிங்கமும் அவரது திருவுருவமும் உள்ளன.

திருக்கோயிலின் வாயிலில் நந்தி பலிபீடங்கள் உள்ளன. கட்டைக் கோபுரவாயிலைக் கடந்து கோயிலுக்குள் சென்றால் வெளிப் பிராகாரத்தை அடையலாம். இத்திருச்சுற்றில் கிழக்கே உள்ள சூரியன் திருவுருவம் தரிசிக்கத்தக்கது. மேற்கே கன்னி மூலையில்

தலவிநாயகர் விளங்குகிருர். விநாயகரையடுத்து சமயாசாரியர் நால்வரும். தக்ஷிணராஜாவும் உள்ளனர். அவர்களை அடுத்து விசுவநாதர் விளங்குகிருர். அடுத்து முருகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். அவரை அடுத்து இராமநாதரும் கஜலக்ஷ்மியும் எழுந்தருளியுள்ளார். வடக்குப் பிராகாரத்தில் வன்னி மரமும், சண்டேசர் கோயிலும் உள்ளன. தலமரம் பனை உள்ளது வலமாகவந்து நந்தி பலிபீடங்களைக் கடந்து கோயிலின்வாயிலை அடையலாம்.

கோயில் மாடக்கோயில் அமைப்புடையது. கோயிலின் வலது புறமுள்ள சோமாஸ்கந்தர் மண்டபத்தின் வழியே திருக்கோயிலுக்குள் செல்லலாம்.

மகாமண்டபத்தில் அம்பாள் தெற்குநோக்கித் திகழ்கிருள். இம் மண்டபத்தில்தான் இத்தலத்தின் சிறப்பு மூர்த்தியாகத் திகழும் வட்டணை நாயகராகிய பிக்ஷாடனர் விளங்குகிருர். உற்சவமூர்த்திகளும் இங்குதான் எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளனர். இத்தலத் திருப்பதிகங்கள் சலவைக்கல்லில் பொறித்து வைக்கப்பெற்றுள்ளன.

இந்த மண்டபத்தைக்கடந்து இரண்டாம் திருவாயிலைத்தாண்டி உள்ளே சென்ருல் முதற்பிராகாரத்தை அடையலாம். கர்ப்பக் கிருகத்தைச்சுற்றிய அழகிய மண்டபத்தில் முதல் திருச்சுற்று அமைந்துள்ளது. கர்ப்பக்கிருகத்தில் சிற்பங்களும் கொடிகளும் மிக நுண்ணிய வேலைப்பாடுகளோடு கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. தெற்கே தக்ஷிணுமூர்த்தி விளங்குகிருர். மேற்கே இலிங்கோற்பவருக்குப்பதில் திருமால் எழுந்தருளியுள்ளார். அவர் எழுந்தருளிய கோஷ்டத்தின் மேல்புறத்தில் நரசிம்மமூர்த்தி சிற்பம் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் திகழ்கிறது. வடக்கே பிர்மா விளங்குகிருர். அவரை அடுத்து அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக அன்னை துர்க்கை விளங்குகின்ருள். நடராஜர்சபை தனியழகோடு திகழ்கிறது. அர்த்தமண்டபத்தில் துவாரபாலகர்கள் விளங்குகின்றனர். அருள்மிகு வலம்புரிநாதர் பிருதிவி வடிவில் விளங்குகிருர். குவளைசாத்தி அபிஷேகம் செய்கின்றனர். பெருமான் திருமுடியில் பெரும்பள்ளம் உள்ளது. அதனுலேயே இவ்வூர் பெரும்பள்ளம் என வழங்கப்படுகிறது எனவும் கூறுவர். அருள்மிகு வலம்புரநாதர் திருமுன் நின்று.

“தேனுடை மலர்கள் கொண்டு திருந்தடி பொருந்தச் சேர்த்தி
ஆனிடை அஞ்சும் கொண்டே அன்பினுல் அமர ஆட்டி
வானிடை மதியம் சூடும் வலம்புரத்து அடிகள்தம்மை
நானடைந்து ஏத்தப் பெற்று நல்விணைப் பயனுற்றேனே”

என்ற தேவாரப்பாடலை ஓதி வழிபட்டு அம்பிகை சந்நிதியை அடைந்து வழிபடலாம். அம்மை வடுவகிர்க்கண்ணியம்மை சந்நிதி மிக்க அழகோடு திகழ்கிறது.

மூர்த்திகள் : இறைவன் திருப்பெயர் அருள்மிகு வலம்புரநாதர். இறைவி திருப்பெயர் அருள்மிகு வடுவகிர்க்கண்ணி அம்மை. மாவடுவின் பிளவுபோன்ற கண்களை உடையவள் என்பது அம்மை பெயரின் பொருளாகும். இங்குள்ள பிக்ஷாடனமூர்த்தி பேரழகோடு திகழ்பவர். திருக்குளத்திலிருந்து கிடைக்கப்பெற்ற மூர்த்தி இவர். வட்டணைநாயகர் என்பது இவர் திருப்பெயர். வட்டணை – சுழற்சி. சுழன்று ஆடும் இத்திருக்கோலத்து இறைவரை வட்டணைநாயகர் என்றனர் பெரியோர்.

“ பட்டுடுத்துப் பவளம்போல் மேனியெல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம்நோவ
இட்டெடுத்து நடமாடி இங்கே வந்தார்க்கு
எவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி
வேறோர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் படநடந்து மாயம்பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே ”

என்ற அப்பரடிகள் அருளிய தேவாரத்திற்கிணையய இம்மூர்த்தி விளங்குகிறார். மிக உயர்ந்த திருவுருவம். கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் இராசாதிராசனின் 8 ஆம் ஆட்சியாண்டில் இத்திருவுருவம் எழுந்தருளுவிக்கப்பெற்றது எனத் தெரிகின்றது. தீர்த்தம் :- பிரம தீர்த்தம், லக்ஷ்மிதீர்த்தம், சுவர்ணபங்கஜ தீர்த்தம். தலமரம் - பனை.

புராண வரலாறுகள்

காவிரிப்பூம்பட்டினம் ஒரு ஆலயம். அதைச் சூழவுள்ள தலங்கள் ஏழும் ஏழுவனங்களாய் - ஏழுகோயில்களாக விளங்குவன என்று கூறப்படுகிறது. அவ்வகையில் இத்தலம் தாலவனம் - கணபதித்தலம். சாயாவனம் - சிவன் தலம். பல்லவவனம் - உமையவள் தலம். வெள்ளைவனம் (வெண்காடு) - சபாபதிதலம். மதங்கவனம்(திருநாங்கூர்)-முருகன் தலம். முல்லைவனம் (திருமுல்லைவாயில்)- வயிரவர் தலம். புங்கவனம் (பெருந்தோட்டம்) - சண்டேசர் தலம் என்று கூறப்படுகிறது.

திருமால் சங்கும், பத்மமும் பெற்றது : திருமால் தவம் செய்யப் போனபோது திருமகளை இத்தலத்திலுள்ள அம்பிகையின் தோழியாக

விட்டுச்சென்றூர். தவம்செய்து சக்கராயுதமும் கதையும் பெற்று இங்குவந்து அம்மையை வணங்கிச் சங்கும் பத்மமும் அவற்றைத் தாங்கும் இருசக்கரங்களும் பெற்றூர் என்பது தலபுராணம்.

ஏரண்டமுனிவர் வரலாறு : கும்பகோணத்தில் தங்கிஅரசாண்ட கனகசோழன் என்பவன் காவிரி வெட்டி தன்னுட்டை வளப்படுத்த முயன்றுன். காவிரித்தண்ணீர் திருவலஞ்சுழியில் பிலத்தின்வழியாகப் பாதாளம் சென்றுகொண்டிருந்தது, அத்தண்ணீர் தன்னுட்டை வளம்செய்வதற்கு உதவவில்லையே என்று வருந்திக் கொட்டையூரில் தவம்செய்துகொண்டிருந்த ஏரண்டமுனிவரிடம் சென்று விண்ணப்பித்தான். முனிவர் முடித்தலைவீழ்ந்தால் பிலத்துவாரம் மூடும் என்றூர். மன்னன் தானே அப்பிலத்தில் வீழப்புறப்பட்டான். முனிவர் மன்னனைத் தடுத்துநிறுத்தித் தானே அதனுள் வீழ்ந்தார். இறையருளால் முனிவர் திருவலம்புரத்தில் எழுந்தார். திருவலம்புர நாதரையும் வடுவகிர்க்கண்ணியையும் வழிபட்டு இத்தலத்தில் சித்திபெற்றூர்.

எலும்பு மலரான வரலாறு : மகததேச மன்னன் தனஞ்சயன் என்பவன் தான் இறந்தபிறகு தன் எலும்பு எங்கு மலராக மாறுகிறதோ அந்தத் தீர்த்தத்தில் தன் அஸ்தியை விடுமாறு தன் மைந்தனுக்குக்கூறி மறைந்தான். மைந்தன் தக்ஷிணன் தந்தை சொற்படி பல தலங்களுக்கும் அஸ்தியை எடுத்துச்சென்று முடிவில் இத்தலத்தில் அவை மலரானதைக் கண்டு இங்குள்ள தீர்த்தத்தில் அவற்றை விடுத்து வலம்புரிநாதரையும் வடுவகிர்க்கண்ணியையும் வழிபட்டுய்ந்தான். அம்மன்னனின் சிலைகள் இத்தலத்தில் உள்ளன.

பெண்பழி போக்கிய பெருமை : வஞ்சிநாட்டு மன்னன் தான் வேட்டைக்குப் போனபோது புலியடித்துத் தான் இறந்துவிட்டதாகப் பொய்ச்செய்தி ஒன்றைத் தன்மனைவிக்குச் சொல்லி அனுப்பினுன் அச்செய்தியைக் கேட்ட மன்னனின் மனைவி உயிர்துறந்தாள். பெண்ணைக்கொன்ற பெரும்பழி தீர்வதற்கு வழியாது எனப் பெரியவர்களிடம் கேட்டான் மன்னன்.

அவர்கள் லக்ஷபிராமணபோசனம் செய்வித்தால் மகான் யாரேனும் ஒருவர் அப்போசனத்தில் கலந்துகொள்வார்; உன் பழி தீரும்; பெரியமணி ஒன்றை அரண்மனை வாயிலில் கட்டி விட்டு இதனைச்செய்; மகான் ஒருவர் விருந்துண்ணும்போது மணி யாரும் அடிக்காமல் தானே அசைந்து ஒலிக்கும் என்றனர். மன்னன் இத்தலத்தில் நாடோறும் பல பிராமணர்களுக்கு உணவளிப்பதைக் கடமையாகக்கொண்டான். ஒருநாள் பட்டினத்தார் பசியோடுவந்து

மன்னன் செய்யும் தருமசாலையில் உணவு கேட்டார். அங்குப் பணி செய்த பிராமணர் இங்கு அந்தணர்களுக்குத்தான் உணவு தருவார்கள்; இருந்தாலும் நீர் மடைப்பள்ளியின் பின்னால் சென்று மறைந்திரும்; தருகிறேன் என்றார் பட்டினத்தார் மடைப்பள்ளியின் பின்புறம் சென்றார், அங்குக் கஞ்சிவடித்திருந்த குழியைக்கண்டார். இரண்டுகை கஞ்சியைவாரி உண்டார். இதுவரை அசையாத மணி அசைந்து ஒலித்தது. மன்னன் தருமசாலைக்கு ஓடிவந்தான்; பட்டினத்தார் தன் விடுதியில் கஞ்சி உண்டதால் தன் பாவம் நீங்கியதை உணர்ந்தான்; அவரை வணங்கி அருள் பெற்றான் என்பது இத்தலத்திற்கு உரிய தனிச் சிறப்பான வரலாறு. மன்னன் உருவம் கோயிலில் உள்ளது. பட்டினத்தாரை மன்னன்சென்று வரவேற்கும் ஐதிக விழா இக்கோயிலில் நடைபெறுகிறது.

கல்வெட்டுக்கள்; இந்தத் திருக்கோயிலில் விக்கிரமசோழன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்கன் இவர்களின் காலங்களில் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக் கல்வெட்டுக்களில் இறைவரின் திருப்பெயர் திருவலம்புரி உடையார் என்றும், இறைவியாரின் திருப்பெயர் தடங்கண்நாச்சியார் என்றும் குறிக்கப்பெற்றுள்ளன. இவ்வூர், விக்கிரமசோழன் கல்வெட்டில் இராசராச வளநாட்டு ஆக்கூர்நாட்டுத் தலைச்சங்காடுத் திருவலம்புரம் என்றும், மூன்றாங் குலோத்துங்கன் கல்வெட்டில் சயங்கொண்ட சோழவளநாட்டு ஆக்கூர்நாட்டுத் தலைச்சங்காட்டுத் திருவலம்புரம் என்றும் கூறப்பெற்றுள்ளது. இக்கோயிலில் கூத்தாடுந்தேவர் அவரது நாச்சியார், பள்ளியறைப் பிராட்டியார் இவர்களை எழுந்தருளுவித்து அவர்களுடைய நாள்வழிபாட்டிற்கு இரண்டேகால்வேலி நிலத்தை அளித்தவன் குலோத்துங்கசோழ வளநாட்டு விளநாட்டு ஆலங்குடியிலிருந்த வேளான் கண்டராதித்தன் ஆவன். இது, நிகழ்ந்தது விக்கிரமசோழனின் ஆறும் ஆண்டில் ஆகும்

இவ்வூர்ச்சபையாராகிய சபையார் மும்முடிச்சோழன் பேரம்பலத்தில் கூட்டங்கூடி, கோயிலுக்கு வேண்டியவைகளைச் செய்து வந்தனர். இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் சயங்கொண்ட சோழமண்டலத்து மேன்மலைப் பழையனூரார் ஒருவர் இக்கோயிலில் சிலபடிமங்களை எழுந்தருளுவித்துள்ளார் கோயில்களுக்கு ஆள்களை விற்கும் வழக்கம் இவ்வூர்க் கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளது. அம்முறைப்படி இராசாதிராச வளநாட்டு நாங்கூராகிய ஸ்ரீபாதுளி சதுர்வேதிமங்கலத்துத் தட்டானாகிய சோமன் ஆறு மனிதர்களைப் பதின்மூன்றுகாசுக்கு விற்றுக் கொடுத்துள்ளான். இங்ஙனமே தலைச்சங்காட்டுத் திருவலம்புரி உடையான் கலியன் குமாரனாகிய தம்பிரான் தோழன் எட்டு ஆள்களை விற்றுக்கொடுத்த செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

திருக்கடவூரில் இரண்டு திருவிளையாடல்

புலவர். திரு. மு. வைத்தியநாதன்

வாய்மையறம் :

உண்மை ஒரு ஆற்றலாகும். அது உலகத்தை வழிநடத்தும் ஆற்றலுடையது. வாய்மை செயற்பாடு ஆகும்போது இடர்ப்பாடுகள் வரலாம். மெய்மை இடையூறுகளைக் கடக்க நேரிடலாம். சத்தியத் திற்குச் சோதனைகள் வரலாம். ஆனால், இடர்ப்பாடுகளை - இடையூறு களை - சோதனைகளை - இடையில் ஏற்படும் தோல்விகளை வென்று இறுதியில் வெற்றிபெறுவது உண்மையாகவே இருக்கும். இதுவாய்மை யறத்தின் நியதியாகும்.

பொய்ம்மாயம் :

பொய்மை அழிவுதரும் ஆற்றலாகும். அது உலகவர்களை அழிவுப் பாதையில் அழைத்துச் செலுத்தும் இயல்புடையது பொய்மைக்கு முதலில் சில வெற்றிகள் கிட்டலாம். அதனால், அதன் மாயை யாரை யும் மயக்கலாம். வாழ்வில் நம்பிக்கையைக்கூட இழந்துவிடச் செய் யும் நிலை ஏற்படலாம். ஆனால், பொய்மையில் மாயவலை அறுந்து போகும். முன்னர் கிடைத்த வெற்றியின்பயன்கள் விரைந்துமறைந்து போகும். பொய்மை நிலைத்ததாக- நிலைத்த வெற்றியைப் பெற்றதாக வரலாறு இல்லை.

திருக்கடவூர் :

எல்லாம் வல்ல இறைவனும் இறைவியும், சில அற்புதங்களை நிகழ்வித்து, அதன் வழித் தம் உண்மையினை அறிவிக்கும் இயல் பினர். பெருமானும் பெருமாட்டியும் உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் மாற்றம் செய்து காட்டி அற்புதம் நிகழ் வித்தனர். இச் செயல்புரிவதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த திருவூர், திருக்கடவூர் ஆகும். சோழநாட்டுத் திருத்தலங்களில் திருக்கடவூர் தலைமை சான்றதாகும்.

இருவர் கருவியாதல் :

திருக்கடவூர் என்னும் தெய்வத் திருத்தலத்திற்கு வந்த மார்க் கண்டேயரைக் கருவியாகக் கொண்டு, உமாமகேசுவரர் உண்மையில்

ஒரு மாற்றம் செய்துகாட்டினர். அவ்வூரில் வாழ்ந்த அபிராமி பட்டரைக் கருவியாகக் கொண்டு, பொய்யில் ஒரு மாற்றம் செய்து காட்டினள் உலக நாயகியாம் அன்னை உமாமகேசுவரி.

இரண்டு திருவிளையாடல் :

இறை ஆணையின்படி உண்மையினை நிலைநாட்டவந்த எமதர் மனைத் தம் காலால் கடிந்து அழித்துப் பொய்யாக்கினன் பரம்பொருள். முந்நூறு ஆண்டுகட்குமுன் ஓர் அமாவாசை நாளில், அபிராமிபட்டர் தன்வசம் இழந்தநிலையில் கூறிய பொய்யை உண்மையாக்கிக் காட்டினள் பராபரை.

மார்க்கண்டன் :

வடபுலத்தில் வாழ்ந்தவர் மிருகண்டு என்னும் முனிவர். தவராசராகிய அவர், பெருமானை மனத்திருத்தித் தவமேற்கொண்டார். கடுந்தவத்தின் இறுதியில், பெருமான் வெளிப்பட்டு, அவர் விருப்பம் யாதென வேண்ட, தம் விருப்பமாக ஒரு நன்மகவு வேண்டினர் மிருகண்டு மாமுனிவர். தயாபரனாகிய இறை அவரிடம், நோய் நொடியுடன்கூடிய பல்லாண்டு வாழ்வுடைய மகன் வேண்டுமா? எல்லா நலனும் பெற்ற, ஆனல், பதினறே ஆண்டு வாழ்வுடைய நன்மகன் வேண்டுமா? என வினவ, முனிவர் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின், நற்பேற்ருேடு கூடிய பதினறு வயது வாழ்வுடைய மகப்பேறு வேண்டினர்.

திருக்கடவூரில் மார்க்கண்டன்:

அவர் விருப்பம் நிறைவேறியது. மார்க்கண்டன் மிருகண்டு முனிவரின் மனம்மகிழ வளர்ந்தான். அருங்கலைத்திறன் வாய்க்கப் பெற்றன். தந்தையை வணங்கித் தலயாத்திரை புறப்பட்டான். யாண்டுகள் பல கடந்தன. பல்வேறுதலங்களில் பெருமானை வழிபடும் பேறு பெற்றன். திருக்கடவூர்வந்து அமிர்தகடேசப்பெருமானை வழி பட்டான். அந்நாள், அவன் உலகியல் உடல்வாழ்வு இறையாணை யின்படி முடியும்நாள். பதினறு ஆண்டுகள் நிறைவு எய்தியநாள்.

எமதருமன் :

உயிர்தங்கிய உடல் முதிர்ந்து பயன்படாமல் போகும் தருணத்தில், அவ்வுடலிலிருந்து, உயிரைப் பிரித்து, அதை இறைவன் திருவடியில் சேர்த்திடவேண்டியது எமதர்மனின் கடமை. இறை யாணையின்படி வரையறுத்த ஆண்டுகள் முடிந்தவுடன் உடலில் தங்கிய உயிரைப் பிரித்துச் சேர்த்திட வேண்டியதும் அவன் கடமை.

மார்க்கண்டனுக்கு விதிக்கப்பட்ட ஆண்டுகள் முடிந்த நாளில், தன் கடமை செய்திட, உண்மையை நிலைநாட்ட, எமதர்மன் பாசக் கயிற்றுடன் புறப்பட்டான். திருக்கடவூரில் அமிர்தகடேசப் பெருமானை வணங்கிய நிலையில் இருந்த மார்க்கண்டன்மீது பாசக் கயிற்றைப் பாய்ச்சினான், உண்மையினை நிலைநாட்டும் ஊழியனாகிய எமதர்மன்.

காலனைக்கடிதல் :

தனக்கு நேர்ந்துள்ள நிலையிலிருந்து காத்து அருள்புரிய வேண்டி, அமிர்தகடேசப்பெருமானைப் பற்றிக் கொண்டான் மார்க்கண்டன். பரம்பொருள் உண்மையினை நிலைநாட்டவந்த காலனைக் காலால் உதைத்து அழித்துத் தம் அன்பின் அடியனாகிய மார்க்கண்டனுக்கு அருள்புரிந்தான். இது காலனைக் கடிந்த பெருமானின் அற்புத ஆடல்.

மரணமிலா வாழ்வு :

எமன் மார்க்கண்டனது உயிரைப் பிடித்திருந்தால் என்ன செய்திருப்பான்? இறைவன் திருவடியில் சேர்ந்திருப்பான். எமன் செய்யவேண்டிய செயலை இறைவன் திருக்கடவூரில் செய்து காட்டியிருக்கின்றான். இதில் உள்ள உண்மை. எமன் மார்க்கண்டன் உயிரைப் பற்றியிருந்தால், அதற்கு மரணம் என்று பெயர். இறைவனே செய்த செயலால் மார்க்கண்டன் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றான். மரணத்தை வென்ற மார்க்கண்டன் மீண்டும் பூமியில் வாழவில்லை. என்றும் பதினாறாக இறையுடன்கலந்தான். உலகில் வாழ்பவர்களுக்கு வயது ஏற்றம் உண்டு. இறையோடு கலந்துவிட்டவர்களுக்கு அந்நிலை இல்லை. தன் இறைவழிபாட்டால் இறவாவரமும், மீண்டும் பிறவாவரமும் பெற்றான் மார்க்கண்டன்.

இந்த வரலாற்றால் நாம் அறியும் உண்மையாவது: பரம்பொருள் தன்னை அடைந்தவர்களின் மரணத்தைப் போக்கி, அவர்களைத் தன்னோடு இணைத்துக்கொண்டுவிடும் அற்புத ஆற்றல் உடையது என்பதே ஆகும்.

அபிராமியின் அற்புதம் :

பெருமானின் இந்த அற்புத ஆடல், உண்மையைப் பொய்யாக்க மாற்றஞ்செய்துகாட்டிய திறத்தை நமக்கு விளக்குகின்றது. இது போல் மண்ணும் மண்ணுலக வாழ்வும் பெரிது என்று எண்ணி வாழ்ந்த மக்களைத்திருத்தத் திருவுளங்கொண்டாள் அன்னை அபிராமி

என்னும் திருப்பெயர்தாங்கிய பெருமாட்டி. அப்பனுக்கு இணையாகத் தாம் ஓர் அற்புதம் நிகழ்வித்தாள். அந்த அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய் திருவூரும் திருக்கடவூரே. அங்குதான் ஓர் பொய்மையினை உண்மையாக்கும் அதிசயத்தை நிகழ்த்துவிக்கின்ருள்.

அபிராமிபட்டர் :

அன்னை அபிராமியின் முன்னின்று. 'உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம். உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது, மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி' என்றும், 'மென்கடிக் குங்குமதோய மென்ன விதிக்கின்ற மேனி' என்றும், 'கிளியே! கிளைஞர் மனத்துக் கிடந்து கிளர்ந்து ஒளிரும் ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே!' என்றும் தன்னை மறந்து பாடிக்கொண்டுநிற்கின்ருர் ஓர் அருளாளர். அவர் அம்மையின் ஒளிவெள்ளத்தில் மகிழ்ந்திருக் கிருர். அவர்தான் அபிராமிபட்டர் என்னும் சக்தியை வணங்கும் சித்தர். இவரைக்கொண்டுதான் பொய்யை உண்மையாக்கும் அற் புதத்தைச் செய்கிருள் அன்னை அபிராமி.

சூழ்நிலை :

தெரிவரும் வஞ்சகனுகிய கண்ணபிரான் கீதையைச் சொல்ல - அருச்சுனனுக்கு அருள்செய்யப் போர்க்களத்தின் இடையே, ஒரு சூழ் நிலையை உருவாக்கியது போல. அன்னை அபிராமி தன் அருளை விளக் கிட, அபிராமி பட்டரைத் திருக்கடவூர் திருவீதியில் உன்மத்தராக உலவ விடுகிருள்.

அபிராமிபட்டர் ;

திருக்கடவூரில் வாழ்ந்த அருந்தவத்து அந்தணர்களில் ஒருவர் அமிர்தகடேசர். அவர் செய்த அரும்பெருந்தவத்தால் பிறந்தவன் 'சுப்பிரமணியன்' என்னும் பிள்ளைத்திருநாமம் உடைய புனிதன். உலகவர்போல் வளர்ந்தான். பழம்பிறப்பின் நற்பேற்ருல், தெய்வ நலம் பெற்ருன். அன்னை வழிபாடு செய்து உயர்ந்தான். காணும் பெண்களை எல்லாம் அன்னையின் வடிவாகவே கண்டு வணங்கிப் போற்றினுன். அவனை ஊர்மக்கள் 'பித்தன்' என்றனர். 'பெருங் காமுகன்' என்றனர். பேதலித்த மதியினர் அறிவரோ அவன்தன் ஆற்றல்! அவனே யாரையும் பொருட்படுத்துவதாக இல்லை. அவன் தற்போதம் இழந்தவன். அருட்போதம் கூடியவன். அன்னையின் எதிரே நின்று உள்ளுருகி மகிழ்பவன். அவனே அபிராமிபட்டன்.

அரசதண்டம் !

ஓர் அமாவாசைநாளில் கடலாட, தஞ்சைமன்னன் சரபோஜி பூம்புகார்நோக்கி வருகின்றான். இடைவழியில் திருக்கடவூர் அமிர்த கடேசப்பெருமானை வணங்க ஆலயத்திற்குள் பரிவாரம்சூழப்பணிந்து வருகின்றான். கண்டோர் அரசன் என்று அகல்கின்றனர். ஆனால், 'ஒளியே ! ஒளிரும் மணிபுனைந்த அணியே ! அணியும் அணிக்கு அழகே !' என்று பாடித் தானற்றநிலையில் இருந்த அபிராமிபட்டர் அகலாதுநின்றார். அருகிலிருந்தோர் செய்த ஆரவாரத்தில் உணர்வு திரும்பிய அபிராமிபட்டர் திரும்பிப்பார்த்தார். அரசன் நீர் யாரென வினவினான். அபிராமிபட்டர் யான் இவ்வூர்வாழும் 'மறையோன்' என்றார். மற்றவர்களால் இவன் 'பித்தன்' என்று அறிவுறுத்தப் பட்டிருந்த மன்னன் அதைச் சோதிப்பான்வேண்டி, நீர் மறையோ ராயின், இன்றையநாளும் கோளும் யாதென வினவ, அபிராமிபட்டர் அம்மையின் ஒளிவெள்ளத்திலிருந்து விடுபடாத மனநிலையில் இன்று 'முழுநிலா' நாள் என்ன, ? யாவரும் நகைத்தனர். அரசன் இன்று நீர் 'முழுநிலா' நாள் என்பதை நிருபணம் செய்யவில்லையானால் அரசதண்டம் உண்டெனப் பணித்தான்.

முழுநிலாநாள் :

மருளும்மாலை வந்துற்றது. அபிராமிபட்டர் தான் அரசனிடம் 'முழுநிலா' நாள் என்று கூறியதைத் மெய்ப்பிக்கவேண்டியவரானார். 'மறைநிலா' நாளில் எப்படி 'முழுநிலா' வரும் ? அம்மையின் திருமுன்சென்று,

" விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடுஎன்ன கூட்டினியே "

என்று பாடிப்பரவிநின்றார். இதைக்கேட்டு இரங்கிய அன்னை தன் காதிலிருந்து அணிசெய்த 'தாடங்கம்' என்னும் அணியை எடுத்து வானில்வீச, அது பேரொளிசெய்துநின்றது. அரசன் முதலியோர் அபிராமிபட்டரின் அருட்சக்தியை உணர்ந்தனர். அன்னையை ஒளிரும்கோலமாகக்கண்ட அபிராமிபட்டர், அந்த நினைவில் அரசன் வினவிற்கு முழுநிலாநாள் என இல்லாததுகூற அதை உண்மை யாக்கிக் காட்டினாள் அபிராமி.

இறைதத்துவம் :

இறைவனும் இறைவியும் ஏன் இவ்வாறு செய்தனர் ? 'கடவுள் என்ற இறைமை உண்மைக்குள்ளோ அல்லது பொய்மைக்குள்ளோ அடங்கியது அன்று. அது உண்மையையும் பொய்மையையும்

தனக்குள் அடக்கி அவற்றினும் கடந்துநிற்பது ' என்பதை உலகினர்க்கு உணர்த்தவேயாம்.

அர்த்தநாரீசுவரர் :

எம்பெருமானும் எம்பெருமாட்டியும் ஒருவராகவந்து, தனக்கு அருள்செய்து, அன்புநெறிப்படுத்தியதாக அபிராமிபட்டர் பாடுகிறார். அந்தஒருவடிவிற்கு அர்த்தநாரீசுவரர் என்பது அடையாளக்குறியீடு ஆகும். குமரகுருபரர். "ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உரு ஒன்றால், அவ்வுருவை ஒருவன் என்பதா? ஒருத்தி என்பதா? என்றுகேட்டு இருவருக்கும் உரிமையாக 'ஒருவர்' என்னும் இயற்சொல் உள்ளது. அது இன்றேல் என்றால் எப்படி அவ்வுருவை அடையாளப்படுத்த முடியும் என்று நயம்படக்கேட்பார்

பிறவியறுத்தல் :

அந்தவடிவில்வந்து தமக்கு அருளி, ஆசை அறுத்துப், பிறவித்தளை உடைத்ததாகப் பாடுகின்றார் அபிராமிபட்டர். 'உமையம்மையும் உமையொருபாகனும் ஏகவுருவில்வந்து இங்கு எந்தத்தகுதியும் இல்லாத என்னையும் ஆண்டு, அப்பெருமான்மீது அன்புசெய்ய வைத்தார். அவ்வாறு அவர் அருளிவிட்டதால், இனிமேல் எந்தச் சமயம்பற்றியும் ஆராயவேண்டிய — சிந்திக்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஏனெனில்? சமயங்கடந்தபொருள் தனக்குப் பெருவாழ்வுநிலை தந்துவிட்டபிறகு எனக்குச் சமயசிந்தனை தேவையற்றது அன்றோ? அந்நிலைமட்டும் அன்று. என்வினைகளை அறுத்து ஆண்டு விட்டதால், இனி 'ஈன்று எடுப்பாள் ஒருதாயும் இல்லை' என்கிறார். உலக ஆசைகள் மூன்று. அவை பொன், பெண், மண் காரணமாக அமைவன. இவைகளில் மிகவும் வலிமையுடையது மாதர்மேல் வைக்கும் மையல். அந்தநிலையிலிருந்தும் நான் விடுவிக்கப்பட்டேன் என்று பாடுகின்றார். 'அமைவுறு தோளியர்மேல் வைத்த ஆசையும் அமையும்' என்பது அவர்தம் திருவாக்கு,

மோனத்தவம் :

அபிராமி அம்மையைக் கருத்தில்வைத்து மோனத்தவம் செய்பவர்கட்கு, அதைவிட வேறுபேறுவேண்டுவதில்லை. எப்படி அவளைக் கருத்தில்வைப்பது? மனிதமனம் அலைந்துகொண்டே இருக்கும், எதையும் அழுந்தப் பதித்துக்கொள்ளும்திறம் அதனிடம் இல்லை. தன்னோடு அதிகமாக உடனிருக்கும் பொருளின் வடிவத்தைக்கூட, கண்ணைமூடிக்கொண்டு அதனால் காணமுடிவதில்லை. மனித மனத்திற்கு மூன்று நிலைகள் உண்டு. நனவுநிலை, கனவுநிலை, நனவில் கனவுநிலை என்பன அவை.

மூன்றுநிலை :

நனவுநிலையில் எந்தப்பொருளும் தெளிவாகத் தெரியாது. அதற்குக்காரணம் நம்முடைய ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் வேலை செய்யும் நிலையில் இருப்பதுதான். இந்தக் கருவிகள் புறக்கவர்ச்சியால் ஈர்க்கப்படுவதால், அகமனம் நன்கு தொழிற்படமுடியாமல் போகிறது. கனவு நிலையில் பொருள்களின் வடிவம் தெளிவாகத் தெரியும், கனவுகாணும் பொழுது பல காட்சிகள் முழுவடிவில் தோன்றி மறைவது உணரலாம். இதற்குக் காரணம், பொறிபுலன்கள் தொழில் செய்யாமல் அடங்கி, மூடியுள்ள நிலையில் இருப்பதால் புறக்கவர்ச்சி இல்லை. அகமனம்மட்டும் தொழிற்பாட்டில் கனவுக் காட்சி தெளிவாக அமைகின்றது. ஒரு வீட்டினுள் விளக்கை ஏற்றி வைத்துக் கதவுகளையும், சன்னல்களையும் திறந்துவைத்தால், விளக்கின் சுடர் பரவுவதில்லை. வெளியில் உள்ள சூரியக்கதிர் ஒளி, அச்சுடர் ஒளியை அடக்கி விடுகின்றது. கதவினையும், சன்னல்களையும் மூடிவிட்டால், அந்த விளக்கின் சுடர் அறை முழுவதும் பரவுகின்றது. அதுபோல் ஐம்பொறிகளாகிய கதவுகளும், புலன்கள் என்னும் சன்னல்களும் திறந்து இருக்கும்போது, மனம், எந்தக் காட்சியையும் முழுதாகக் கொண்டு உணர்வதில்லை. நனவில் கனவு நிலை என்பது ஐம்பொறிகள் திறந்துள்ள நிலையில் அவைகளை அடக்கி ஆண்டு, தம் உள்ளத்தே விரும்பியதைக் காணலாகும். அதாவது பொறிகளின் வழியே மனம் செல்லாமல், உள்முகமாகத் தன் வழிபடு தெய்வ உருவை நிறுத்துதல் ஆகும். அவ்வாறு நிறுத்துவது ஒரு கணப்பொழுது ஆயினும், அதனால் பயன் உண்டு.

அற்புதக் காட்சி :

இத்தகைய நனவில் கனவுநிலைப் பயிற்சியுடைய அபிராமி பட்டர் அம்மையைக் காணுங்காட்சி, அற்புதக்காட்சியாகும்.

“ சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. ”

அம்மையின் வடிவைக் கருத்தில் வைத்துத் தன்னந்தனியிருந்து பார்க்க வேண்டுமாம். அவ்வாறு பார்த்தால், அதுபோலும் தவம் பிறிதில்லையாம்.

சித்திர ஞானபாதம்!

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ, பிஎச். டி

அருணகிரிநாதர் :

தமிழ்ப்பாட்டிலே எவ்வளவு சந்த வேறுபாடுகளைப் புகுத்த முடியுமோ, அவ்வளவையும் புகுத்தி அற்புதம் புரிந்துள்ளார் அருணகிரிநாதர். சற்றேறக்குறைய கி. பி. 15-ஆம் நூற்றுண்டிலே வாழ்ந்த இவ்வருளாளர் வடித்த திருப்புகழ்ப்பாக்கள் பதினாறுயிரம் என்பர்; இப்போது கிடைப்பன ஆயிரத்துமுந்நூறு பாட்டுக்களே. அத்தனை பாட்டுக்களும் ஓசைநயம் சான்ற கருவூலங்களாக விளக்கு கின்றன.

திருப்புகழ்த்திறம் :

திருப்புகழில் ஈடுபட்ட அன்புள்ளங்கள் பாடிய எத்தனையோ பாட்டுக்கள் தமிழில் உண்டு, அவை அத்தனையும் திருப்புகழ்ச்சுவை யிலே திளைத்த உள்ளங்களின் உணர்ச்சிக் குவியல்கள்.

“வேதம்வேண்டாம்; சகல வித்தைவேண்டாம்; கீத
நாதவேண்டாம்; ஞான நூல்வேண்டாம்—ஆதி
குருப்புழை மேவுகின்ற கொற்றவன்ருள் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்”

என்று ஒருபாட்டு ‘ஒன்றும் வேண்டாம்; திருப்புகழே போதும்’ என்று முடிக்கின்றது.

திருப்புகழைப் படித்தால் என்னென்ன பெறலாம்? அதனை ஓது கின்றது ஒரு கவி:

“ஞானம்பெறலாம்; நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோன வீடு
ஏறலாம்; யானைக்கிளையான் திருப்புகழைக்
கூறினூர்க் காமேயிக் கூறு”

திருப்புகழ்த் தொகையைக் கோடிட்டுக்காட்டி அதன் சிறப்பை, ‘வீட்டின்பம் பெற அஃதுஏணி; மனத்தளர்ச்சிக்கு ஆணி; பிறவியை அறுக்கும் அரம்’ என்று நலம்புனைந்துரைக்கும் கவி ஒன்று.

"அருண கிரிநாதர் பதினாறு யிரம் என்று
உரைசெய் திருப்புகழை ஓதீர் — பரகதிக்கஃது
ஏணி; அருட்கடலுக்கு ஏற்ற மனத்தளர்ச்சிக்கு
ஆணி; பிறவிக்கு அரம்"

திருப்புகழைப் படித்தால் உலகியலைத் துச்சம் எனக் கருதும் அருள்வீறு தோன்றும்; இதனை ஒருபாட்டு எவ்வளவு அழகாக உணர்த்துகின்றது !

"திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாலே
ஒருத்தரை மதிப்பதிலை உன்றன் அருளாலே
பொருப்புக மிகப்பொருது வென்று மயில்மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்ற பெருமாளே !"

இவ்வாறு உள்ளத்தைத் திருத்தி முருகனைக் குடியேற்றும் திருப் புகழ்ப் பாட்டுக்களை எப்போதும் ஓதுதல் வேண்டும்; ஓதினால் கந்தன் கருணை கருத்தை வாழ்விக்கும். அருணகிரிநாதர் வேண்டும் வேண்டு கோளை நாமும் ஓதுவோம் அது முருகன் திருச்செவிகளில் விழும்; கேட்டது கிடைக்கும்; முன்னியது முடிப்பவன் முருகக் கடவுள். அருணகிரிநாதர் பல்வேறு விண்ணப்பங்களை ஆங்காங்கு முருகப் பெருமான் திருச்செவிகளுக்கு இடுகின்றார்; அவற்றுள் தலையாயது எது? திருவடிக்காட்சி வேண்டுவது; திருவடிப்பேறு வேண்டுவது, அவற்றை உள்ளடக்கிய பல பாட்டுக்களில் ஒன்றை இங்குக் காணலாம்.

புள்ளிருக்கு வேளூர்த் திருப்புகழ் :

புள்ளிருக்கு வேளூரில் வீற்றிருக்கும் செல்வமுத்துக்குமாரன் திருப்புகழை ஓதி மகிழ்கின்றார் இவ்வருளாளர்.

"தத்தன தான தான தத்தன தான தான
தத்தன தானதான தனதான"

என்ற இசைக்குறிப்புச் சந்நிதியில் திருவுள்ளத்தில் தோன்றுகின்றது. திருவாய்மலர்கின்றார்; தித்திக்கும் தேன் தமிழாகப் பெருக்கெடுக் கின்றது. பன்னிரு செவிகளிலும் அன்பன் தரும் அமுதத்தைப் பருகிச் சுவைக்கின்றான் முத்துக்குமாரக்கடவுள்.

பிறவிகள் பல எடுத்த தம் முன்னைநிலையை எண்ணுகின்றார் தொடக்கத்தில். எத்தனையோ கோடி, கோடி விட்டு உடல்களோடு ஓடியாடி எத்தனையோ கோடி போனது; அளவு இல்லை. மோகமும்,

போகமுமாக இப்படியாகிக்கொண்டே போனுல் எப்படி ஆவது ?'' இனிமேல் யோசித்திடில், சீச்சீ !'' என்று தொடர்கின்ருர். மாயைச் சிக்கினில் மாயும்நிலே போதும்; **அடியேனுக்கு உன் அழகிய ஞான வடிவாகிய திருவடிகளே அருளவேண்டும்** என்று விண்ணப்பம் இடுகின்ருர்.

" சித்திர ஞானபாதம் அருள்வாயே :''

அழகானசொற்கள்; விண்ணப்பம் பாட்டின் முதற்பகுதி முற்ருய்ப்பாக மலர்கிறது.

நாள்தோறும் தன்னே ஓதுவார்கள் சித்தமே வீடாகக் குடியிருப் பவன் ஆறுமுகக் கடவுள்; வைத்தியநாதப் பெருமானுக்குச் செல்வ மகன்; நிட்கள வடிவம் உடையவனும், பாதி வடிவம் அம்மையாக இருப்பவனும், சூலபாணியாகியவனுமான தகப்பனுக்குப் பிள்ளே. அதுமட்டுமா ? நீலமயில்மீது ஏறிவரும் வீரன். இப்படி எல்லாம் பாட்டின் பிற்பகுதியில் அடுக்கிக்கூறி மகிழ்கின்ற அடிகள். புள்ளி ருக்குவேளூர் இயற்கை வளத்தையும் கூறத் தவறவில்லே. "வயலில் உள்ள கயல்மீன்கள். பசுமையான இலேகளோடு செழித்து நிற்கும் கமுகுமரங்களின் பாளேகளின் அளவிற்குத் தாவிக் குதிக்கின்ற புள் ளிருக்குவேளூர் '' என்று சிறப்பிக்கின்ருர்.

" பச்சிள பூக பாளே செய்க் கயல் தாவு வேளூர்
பற்றிய மூவர் தேவர் பெருமாளே !''

தொடக்கமும் முடிவும் :

அற்புதமான முடிவு, ஆம்; தொடக்கத்திலே இருந்த சோர்வு போன இடம் தெரியவில்லே. கடந்தகாலத் துயரநினேவுகள் கழன் ருேடி விட்டன. நிகழ்காலப் பேரின்பக் காட்சி ஒன்றே நினேவில் மிஞ்சுகின்றது. எதிர்காலத்தில் **"சித்திர ஞான பாத''** இனிமையிலே உள்ளம் கள்ளூறு வண்டாய்க் களிக்கின்றது. அடிகளாரின் புள் ளிருக்குவேளூர்த் திருவாக்கு நமக்கெல்லாம் அங்குச் சென்று சந்நிதி யிலே உருகிப் பாட ஏற்ற உணர்வு ஓவியம்.

" சித்திர ஞானபாதம் அருள்வாயே ''

என்ற வேண்டுகோள்தான் எவ்வளவு சுருக்கமானது; திருவடிப்பேறு அன்ருே சைவ சித்தாந்த ஆன்ம லாபம் ! அந்தத் தத்துவப் பேருண்மையை இசைத் தமிழினுடன் கலந்த அரிய கவிதையாக வழங்கியுள்ளார் அடிகளார்; பன்முறை அதனே உருகி ஓதுவோம்; உயர்நிலேப் படிகளில் ஏறுவோம்,

எத்தனை கோடிகோடி விட்டுடல் ஓடியாடி
எத்தனை கோடிபோன தளவேதோ
இப்படி மோகபோகம் இப்படி யாகியாகி
இப்படி யாவதேது ? இனிமேல், யோ -
சித்திடில் சீசி சீசி குத்திர மாயமாயை
சிக்கினி லாயுமாயும் அடியேனைச்
சித்தினி லாடலோடு முத்தமிழ் வாணரோது
சித்திர ஞானபாதம் அருள்வாயே !
நித்தமும் ஓதுவார்கள் சித்தமெ வீடதாக
நிர்த்தம தாடும்ஆறு முகவோனே !
நிட்களரூபர்பாதி பச்சுருவான மூணு
நெட்டிலை சூலபாணி அருள்பாலா !
பைத்தலை நீடுமாயி ரத்தலை மீதுபீறு
பத்திர பாதநீல மயில்வீரா !
பச்சிள பூகபாளை செய்க்கயல் தாவுவேளூர்
பற்றிய மூவர் தேவர் பெருமாளே !

— புள்ளிருக்குவேளூர்த் திருப்புகழ்.

ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின்முதல்வருமான ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் திருப் பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர் களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

ஆயுட் சந்தா	(உள்நாடு)	ரூ.	100—00
,,	(வெளிநாடு)		125—00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)		7—50
,,	(ஸ்ரீலங்கா)		10—00
,,	(வெளிநாடு)		12—00

நிர்வாக ஆசிரியர்: "ஸ்ரீ குமரகுருபரர்"
ஸ்ரீ காசிமடம் : திருப்பனந்தாள்.
தஞ்சை மாவட்டம். 612 504.

Gram : BANYAN.
Phone : 210.

INDIAN BANK

25 PAISE - ALL IT TAKES

TO OPEN AN ACCOUNT WITH

INDIAN BANK

Surprising how much you can save if you let us keep your small change at INDIAN BANK - in our TINY DEPOSIT Scheme.

Your Deposits, even as low as 25 p. or its multiples, are collected at your door - steps.

Get in touch with your nearest INDIAN BANK Branch for details.

TINY DEPOSIT SCHEME
from INDIAN BANK - you do the saving, we do the collecting.

INDIAN BANK
(wholly owned by the Govt. of India)
Head Office: No. 31, Rajaji Salai,
MADRAS — 600001.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு, புரட்டாசித் திங்கள் 29 ஆம் நாள் (15—10—79) திங்கட்கிழமை காலை 8 மணி அளவில் திருநனிபள்ளி திருவலம்புரம் இவ்விரு திருக்கோயில்களிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது திருக்கடவூர் தேவஸ்தானம் திருமுறைப் பணியாளர் திரு. நடராச குருக்கள் அவர்களால் தலத்திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. திருநனிபள்ளி அருள்மிகு. நற்றுணை நாதர் ஆலயத்தில் காலை 8 மணி அளவில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி மாணவர்களால் தேசியசேவைத் திட்டத்தின் கீழ் திருக்கோயில் தூய்மைப்பணி செய்யப்பெற்றது. பின்னர் 10 மணி யளவில் சமயவிரிவுரைக் கூட்டம் நடைபெற்றது. திரு. கஸ்தூரிரங்கன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., திரு. வி சா. குருசாமி தேசிகர் எம் ஏ. ஆகியோர் விரிவுரையாற்றினர். திருநனிபள்ளி கிராமத்தலைவர் திரு. முருகேசன் அவர்கள் நன்றியுரைக்குப்பின் வழிபாடுநிறைவுற்றது.

திருவலம்புரம் அருள்மிகு வலம்புரநாதர் ஆலயத்தில் மாலை 7 மணி யளவில் புலவர் திரு. என். தியாகராசன் அவர்களின் வரவேற்புரைக்குப் பின்னர் தொடர்ந்து கீழப்பெரும்பள்ளம் திரு. சி. நாகலிங்கம் பிள்ளை அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். மேலையூர் தாசில் பண்ணை திரு. இரா. இராஜசேகரன் B. Sc B. L. அவர்கள் தலைமையில் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ, திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ, திரு. வை. சுவாமிநாதன் ஆகியோர் விரிவுரையாற்றினர். திரு கண்ணப்பன் அவர்களின் நன்றியுரைடன் வழிபாட்டு விழா இனிதே நிறைவுற்றது.

தருமையாதீனத்திலும், திருத்துறையூரிலும்

ஸ்ரீ அருணந்தி தேவர் குருபூஜை விழா

சந்தானசாரியர்களுள் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜை விழா புரட்டாசித் திங்கள் 31 ஆம் நாள் (17—10—79)

புதன் கிழமை காலே தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சமயாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. மாலே 7 மணி யளவில் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள்.

அன்று திருத்துறையூரில் ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுவரர் திருக்கோயிலில் சுவாமி அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கும் ஸ்ரீ அருணந்தி தேவ நாயனர் குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீ அருணந்தி தேவருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன.

திருத்துறையூரில் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ, வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ, வித்துவான். திரு. ந. சண்முகசுந்தர தேசிகர் ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் கலந்துகொண்டு வழிபட்டும் விரிவுரைகள் கேட்டும் பயன் பெற்றனர்.

தருமையாதீனத்திலும், திருப்பெண்ணுகடத்திலும்

ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜைவிழா

சந்தானுசாரியருள் முதலாமவராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் குருபூஜைத் திருநாள் வழிபாடு, ஐப்பசித்திங்கள் 5 ஆம் நாள் (22—10—79) திங்கட்கிழமை காலே தருமையாதீனம் ஸ்ரீ ஞான புரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. மாலே 7 மணியளவில் வித்துவான் திரு மு. ஆறுமுக தேசிகர், வித்துவான் திரு. வி. சபேசன் ஆகியோர் விரிவுரையாற்றினர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலே மாலே இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள்.

அன்று காலே திருத்தூங்கானை மாடம் அருள்மிகு கடந்தைநாயகி உடனுகிய அருள்மிகு சுடர்க்கொழுந்தீசர் திருக்கோயிலில் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பெண்ணுகடம் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் ஆலயத்திலுள்ள குருமூர்த்தத்திற்கும் திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் ஆலயத்திலுள்ள குருமூர்த்தத்திற்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் பலர்வந்து வழிபட்டுப் பயன் பெற்றனர்.

கந்தசஷ்டி விழா

தருமையாதீனத்தில்

அருள்மிகு முருகப்பெருமானுக்குரிய திருநாட்களுள் மிகச் சிறந்த தாகக் கொண்டாடப்பெறும் ஐப்பசி கந்த சஷ்டித் திருநாட்களில் தருமையாதீனத்தில் ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாட்டோடு ஸ்ரீமுருகப்பெருமானுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். மாலை 7 மணி அளவில் நாள்தோறும் கந்தபுராண விரிவுரை நிகழவும் அருள்பாலித் தார்கள். சென்னை ஸ்ரீ சங்கரபக்தஜன சபா ஸ்தாபகர் சிவபுராணச் சக்கரவர்த்தி ஆங்கீரச ஸ்ரீ எஸ். வேங்கடேசசர்மா அவர்களால் கந்தபுராண விரிவுரை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் முன்னிலையில் நிகழ்த்தப்பெற்றது. ஆதீன அடியவர்களும். ஆதீன அலுவலர்களும் ஆதீனக் கல்விநிலைய ஆசிரியர்களும் பிறரும் கேட்டுப் பயன் பெற்றனர்.

ஆதீனதேவஸ்தானங்களில்

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோயிலில் 21—10—79 முதல் 26—10—79 முடிய உள்ள கந்தசஷ்டி விழா நாட்களில் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் நாள்தோறும் மாலை 6 மணியளவில் கந்த புராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., புலவர் திரு. மு. சிவச் சந்திரன் எம். ஏ., வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., வித்துவான் திரு. மு. முருகை யாதேசிகர், திரு. த. அகரமுதல்வன் எம். ஏ. ஆகியோர் கந்த புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பக்தர்கள் பலர்கேட்டுப் பயன்பெற்றனர்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலில் கந்த சஷ்டி விழா நாட்களில் ஸ்ரீ முருகப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. நாள்தோறும் மாலை 7 மணி அளவில் திருக்கோயில் பிரசாரமண்டபத்தில் கந்த புராண விரிவுரைகள் நடைபெற்றன. வித்துவான் திரு. மு. ஆறுமுகதேசிகர், வித்துவான். சிரோமணி திரு. வி. சபேசன், வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன், திரு. தியாகப்பச்செட்டியார் வித்துவான் திரு. மு. சுந்தரேசம்பிள்ளை ஆகியோர் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து வழி பட்டும் கந்தபுராண விரிவுரையைக் கேட்டும் முருகப்பெருமான் திருவருள் பெற்றனர்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயிலில் கந்த சஷ்டிவிழா நாட்களில் முருகப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. நாள்தோறும் மாலை 7 மணி அளவில் வித்துவான் திரு. சு. சுவர்ணகாளீசுவரன் வித்துவான் திரு. டி.வி.கோபாலய்யர் எம். ஏ வித்துவான் திரு ஆபத்சகாயம், திரு. இராமச்சந்திர அய்யர் பி. ஏ., பி எல்., புலவர் திரு. அரங்கசாமி, வித்துவான் திரு. மு. வைத்தியநாதன் ஆகியோரால் கந்தபுராண விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. பலர் வழிபட்டும் விரிவுரையைக் கேட்டும் பயன் பெற்றனர்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்குக் கந்தசஷ்டி விழா 21—10—79 ஞாயிற்றுக் கிழமை முதல் தொடங்கி பத்து நாட்கள் நடைபெற்றது. நாடோறும் மாலை 7 மணியளவில் சென்னை சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் திரு. க சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. நாள்தோறும் ஆறுமுகருக்கும், செல்வமுத்துக் குமாரசுவாமிக்கும் லட்சார்ச்சனை நடைபெற்றது.

மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ வள்ளிதேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டிவிழா 21-10-79 ஞாயிற்றுகிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. காலை, மாலை இரு வேளைகளிலும் சிறந்த நாதஸ்வர இன்னிசையுடன் திருவீதியுலா நடைபெற்றது. கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு லட்சார்ச்சனை 11—10—79 வியாழக்கிழமை தொடங்கி 26—10—79 வெள்ளிக்கிழமை கந்தசஷ்டி நாளில் லட்சார்ச்சனை நிறைவு செய்யப்பெற்றது.

விழா நாட்களில் நாள்தோறும் மாலை 6 மணியளவில் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. திரு. வி. சா, குருசாமிதேசிகர், திரு. இரா. செல்வக்கணபதி, திரு. ஆ. ராமபத்திரன், திரு. சிங்காரவேலன் திரு. சொ. முத்தையன், திரு. அ. கலியபெருமாள் ஆகியோர் கந்த புராண விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்கள் வந்து முருகப்பெருமானை வழிபட்டும், விரிவுரைகளைக்கேட்டும் பயன்பெற்றனர். மற்றுமுள்ள ஆதீனத் திருக்கோயில்களிலும் கந்தசஷ்டித் திருநாளன்று முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

நாயன்மார் குருபூஜைகள்

நரசிங்க முனையரையர், உருத்திரபசுபதி நாயனர், திருநாளைப் போவார், பூசலார் நாயனர், ஐயடிகள் காடவர்கோன் ஆகிய நாயன்

மார்களின் குருபூஜைகள் முறையே 3—10—79, 7—10—79, 10—10—79, 24—10—79, 26-10-79 ஆகிய தேதிகளில் நிலைய பூஜைமடத்தில் நடைபெற்றது. பேராசிரியர் திரு. ஏ. அய்யாசாமி எம். ஏ., அவர்கள் பெரியபுராணம் வாசித்து விளக்கவுரை நிகழ்த்தினார்கள்.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 10—10—79 புதன் கிழமை மாலை 7 மணிக்கு நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்த பிறகு புலவர் திரு. N. இராமலிங்கம், திரு N. இராமமூர்த்தி அய்யர், குமாரி R. கௌரி ஆகியோர் வேளூர்ப் பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினர்.

நிலைய சுவாமிகள் எல்லோரையும் வரவேற்று திரு P. A. தெய்வசிகாமணி M. A., B. L., அவர்களை விழாவிற்குத் தலைமை வகிக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள். திரு. P. A. தெய்வசிகாமணி அவர்கள் நான் வைணவ குலத்தில் தோன்றியவனாக இருந்தாலும் முருகப்பெருமானிடத்தில் ஆழ்ந்த பக்தி உண்டு; உலகிற்கோர் ஒப்பற்ற கண்கண்ட மருத்துவக் கடவுளாய்த் திகழும் புள்ளிருக்கு வேளூர் இறைவனைக் குலதெய்வம்போல் வழிபடுவேன்; நான் பலவிதமான பேறுகளைப் பெறுதற்குக் காரணமாக விளங்கும் ஸ்ரீ முத்தையாவே எனது கண்கண்ட தெய்வம்; பலமுறை வைத்தீஸ்வரன் கோயில் போவதைத் தொண்டாகக் கொண்டிருக்கிறேன்; இவ்விடத்தில் அபிஷேகப் பிரசாதத்தைப் பெறுவதால் யாவருக்கும் பெரும்பேறு கிட்டுகின்றது என்று கூறி, தமக்கு இத்தகைய பேறு கிடைத்ததற்கு நிலையத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். நிலைய சுவாமிகள் எல்லோருக்கும் நன்றி கூறியபின் பிரசாதம் வழங்கப்பட்டது.

கந்த சஷ்டி விழா

இவ்விழா 21-10 79 முதல் 27-10-79 முடிய 7 நாட்களுக்கு நிலையமன்றத்தில் நடைபெற்றது தினந்தோறும் மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு சகஸ்ரநாம அர்ச்சனையும் தொடர்ந்து அருட்பாடல்கள் பாராயணமும், பின்னர் ஸ்ரீ V. S. V குருசுவாமி சாஸ்திரிகள் அவர்களால் கந்தபுராண விரிவுரையும் நடைபெற்றன.

முதல் நாள் விழாவைத் துவக்கிவைத்து திரு. P. V. வெங்கடேஸ்வரன் (D. S. P.) அவர்கள் பேசுகையில். உலகில் ஒப்பற்ற தெய்வமாகிய முருகவேள் தோற்றத்தினால், சகல உயிர்களும் மெய்ஞ்ஞானம்

பெற்று உய்கின்றன. எத்தகைய வினைகளும் தீர்வதற்கு உலகுக்கோர் கடவுளாகிய முருகப்பெருமானே கண்கண்ட தெய்வம் என்று பல அரிய கருத்துக்களுடன் விளக்கிச் சொல்லி, இவ்வாண்டு விழா நாட்களிலும் முருகப்பெருமான் அவதார வரலாறுகளைப் பேருரையாற்றும் ஸ்ரீ V. S. V. குருசுவாமி சாஸ்திரிகள் அவர்கள் பேரறிவு பெற்று பொலிவுபெற்றவர் என்றும், அவர் முருகப்பெருமானின் பெருமைகளைக் கூறுதல் மிகப்பொருத்தம் என்றும் கூறினர்.

திரு. குருசுவாமி சாஸ்திரிகள் 7 நாட்களிலும் ஸ்ரீ கந்தப்பெருமானின் தொன்மையும் நீர்மையும், பார்வதி அவதாரமும், பரமனின் தவமும், உமையின் தவமும் திருமணமும், ஸ்ரீ முருகன் அவதாரம், பிரணவோபதேசமும் வீரவாகு தூதும், நிக்கிரகமும் அனுக்கிரகமும், ஸ்ரீ கன்னியர் இருவரின் திருமணம் என்றதலைப்புகளில் கந்தபுராணப் பேருரையாற்றினர்கள். பூர்த்திவிழா அன்று குமாரி ஆர். கௌரி குழுவினர் பக்திப் பாடல்களைப் பாடினுர்கள் திரு. நல். முருகேச முதலியார், திரு. ஆர். சிவஞானம் செட்டியார், குமாரி ஆர். கௌரி ஆகியோர் கந்தபுராணப்பேருரையாற்றிய ஸ்ரீ குருசுவாமி சாஸ்திரிகள் அவர்களைப் பாராட்டிப் பேசினுர்கள். திரு. பி. ஜி. செங்கல்வராய செட்டியார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினுர்கள். புலவர் திரு. ஏ. நாராயணசுவாமி அய்யர் எல்லோருக்கும் நன்றி கூறியபின் விழா இனிது நிறைவுற்றது.

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	ரூ. 9—00
ஆண்டுச் சந்தா	(சிலோன்)	11—00
ஆண்டுச் சந்தா	(வெளிநாடு)	17—00
ஆயுள் சந்தா	(உள்நாடு)	100—00
ஆயுள்சந்தா	(வெளிநாடு)	125—00

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம். 609001.
தஞ்சை மாவட்டம்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

சித்தார்த்தி ஹு கார்த்திகை மீ 1உ முதல் 29உ முடிய.

(17—11—79 முதல் 15—12—79 முடிய)

ஸ்ரீ சித்தார்த்திஹு ஐப்பசிமீ 30உ சுக்கிரவாரம் சித்திரை நக்ஷத்திரம் தைதுலைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம்முதல் 45 நாழிகை 12 விஞடிக்குச் சிம்ம லக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் துலாராசியிலிருந்து விருச்சிகராசி சங்கிரமணமாக கார்த்திகைமாதப் பிரவேசம் செய்கின்ருர். மறுநாள் கார்த்திகைமீ 1உ விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சங்கிரமகாலகிரகஸ்திதியின் பலனுவது லோகமெங்கும் சுபிட்ச சூசகமாக நீர்வளம் நிலவளம் மிகுந்து பிரஜைகளின் உழவுத் தொழிலில் விருத்தி பலன் ஏற்படும். லோகத்தில் தர்மமான இராஜ்ய பரிபாலனம் நடக்கும். அதர்மம் வீயும். லோகநாடுகளில் ஆங்காங்கு ஆட்சித்துறைகளில் இலட்சுமி கரம் பொருந்திய சிவதர்மநெறியாளர்கள் இறைவன் வகுத்த வழியில் பரிபாலன்ம் நடத்திப் பிரஜாநலம் காப்பார்,

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களின் பூர்வபுண்ணியத்திஞல் உயர்ந்து ஈஸ்வரபூசையையே நித்திய நியமமாகக்கொண்டு ஞானபீடத்தில் விளங்குகின்ற சிவஞான குருமகான்கள் மீண்டும் இப்பூவுலகில் புண்ணியமாகச் செய்விக்கின்ற லோக சுபிட்சார்த்த யாகங்கள், தெய்வப் பிரீதியான வேதங்களின் முழக்கங்கள், மனுநீதி உரைகளினுல் நல்வழி உணர்த்துதல் ஆகியவற்றின் பலனுல் லோகத்தில் சுபிட்சமும் குருவழியில் நல்லோர்களின் தர்மபரிபாலனங்களும் நடக்கும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள் நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். பிரஜைகள் தெய்வபக்தியாகவும் க்ஷேமகரமாகவும் வாழ்வார்கள்.

சனிப்பெயர்ச்சி

குறிப்பு :- ஸ்ரீசித்தார்த்திஹு கார்த்திகைமீ 13உ (29-11-79) குருவாரம் சூரியன் உதயம்முதல் 48 நாழிகை 54 விஞடிக்குச் சூரிய புத்திரனுகிய சனிபகவான் சிம்ம ராசியிலிருந்து கன்னியா ராசியில்

பிரவேசிக்கிறார். சனிபகவான் தன்னை வழிபடும் பக்தர்களுக்குச் சகல துன்பங்களையும் போக்குபவர் ; நீண்ட ஆயுளைத்தருபவர் ; விரும்பிய பயன்களை அருள்பவர். "சனிபகவானைப்போல் கொடுப்பவரும் இல்லை ; சனிபகவானைப்போல் கெடுப்பவரும் இல்லை " என்பது முதுமொழி.

சனிபகவான் கன்னியா ராசியில் சஞ்சரிக்கிற காலமாகிய முப்பது மாதங்களில் இராசிகளுக்குக்கீழ்க்கண்ட பலாபலன்களை நடத்துவார்.

மேஷம், கடகம், விருச்சிகம் இவ்விராசிகளை உடையோருக்கு மனோபலம் மிகும். வழக்குகளில் வெற்றிதரும். கீழ்ப்படிந்தோர்கள் நன்கு பணிபுரிவர். நிதிநிலைமையில் அபிவிருத்தி ஏற்படும். பதவி அந்தஸ்து கௌரவம் முதலியவை உயர்ந்து விளங்குவதாகும்,

சிம்மம், கன்னி, துலாம், கும்பம் இவ்விராசிகளையுடையோருக்கு குடும்பத்தில் அதிகச் செலவினங்களை ஏற்படுத்தும் ; களத்திரவகை சுகக்குறைவாகும் ; காரியங்கள் இலகுவில் நடக்காமல் தாமதிக்கும் ; ஜீவனோபாயத்தில் அல்லல் நிலைமையாகும் ; கூட்டாளிகளுடன் மனவேற்றுமை ஏற்பட்டுப் பின் மாறும்.

ரிஷபம், மிதுனம், தனுசு, மகரம், மீனம் இவ்விராசிகளையுடையோருக்கு மத்திம பலனாக நடந்துவரும். பணவசதியில் சாதாரண நிலைமையாக இருந்துவரும். வீடு இயந்திர வாகனங்களில் பணம் முடங்கும். உழைப்புக்கேற்ற ஆதாயமின்மை காணும். எல்லா விஷயங்களிலும் மந்தநிலைமையும் காலதாமதமாகப் பலன் கைகூடுதலும் ஆகும்.

எல்லாராசிகளையுடையோரும் சனிபகவானைப் பிரீதிசெய்யும் வழிகளில் ஒன்றைக் கடைப்பிடித்தலினால் மேற்கண்ட அதமபலன்கள் பாதிக்காது. மத்திமபலன்கள் குறைநீங்கி நலம் பயக்கும். சுப பலன்கள் மேலும்மேலும் செம்மையுடையதாகும்.

சனிப்பிரீதி : சனிக்கிழமை விரதம் அனுஷ்டித்தல், எள்ளுடன் நல்லெண்ணெய் விளக்கு சனீஸ்வரனிடம் ஏற்றிவைத்தல். நவக்கிரக பிரதட்சணம் வருதல். சனீஸ்வர ஸ்தோத்திர பாராயணம் செய்தல், நீலக்கல் பதித்த மோதிரம் அணிதல், திருநள்ளாறு க்ஷேத்திரத்தில் விளங்குகின்ற சனிபகவானை வழிபடுதல், இவற்றில் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றுவதால் அல்லல்களிலிருந்து விடுபட்டு நலம் பல அடையலாம்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் திருப்திகரமாக வந்துகொண்டிருக்கும். 13உயில் ஏற்படுகிற சனிப்பெயர்ச்சியினுல் இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் தரும், வியாஜ்யங்களில் ஜெயம் ஏற்படும். 20உ அளவில் சகோதரருக்கு அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். வித்தியா வியா பாராதி கலைத்துறைகளில் கியாதி ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். கார்த்திகைமீ 3உ 30 நாழிகை 39 விஞடி முதல் 5உ 47 நாழிகை 53 விஞடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

2, ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனுதி சௌகரியங்கள் நன்ருக இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். 8உக்குமேல் வாகனப்பிராப்தியில் ஓர் நற்பலனை ஏற்படுத்தும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் பிரபலஸ்திதியாகும். 20உ அளவில் எழுத்துமூலமானவற்றில் நிர்ப் பந்தம் வந்து சரிபடும். புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். மனைவிக்குச் சிரோபாதைபோன்ற நலிவு தோன்றி உடன் குணமாகும். கார்த்திகைமீ 5உ 47 நாழிகை 53 விஞடி முதல் 7உ 59 நாழிகை 16 விஞடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனவருமானம் திருப்தியளிக்கும். செந்நெல் பிராப்தியில் நல்ல நிலைமையாக இருந்துவரும். சகோதரருக்கு நன்மைகள் ஏற்படும். வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறையில் 20உ அளவில் மிகுந்த நற்பலன் ஏற்படும். அரசாங்கக் காரியங்களில் நம்பிக்கை நாணயம் லேவாதேவிகளில் அந்தஸ்து உயர்வை ஏற்படுத்தும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். கார்த்திகைமீ 7உ 59 நாழிகை 16 விஞடி முதல் 10உ 6 நாழிகை 55 விஞடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணசௌகரியம் மேலாக இருந்துவரும். 13உ முதல் பாதசனி நீங்கும். மந்தநிலைமையாக இருந்த எல்லாவிஷயங்களிலும் பிரகாசம் ஏற்படும். சகோதரருக்கு நல்லஸ்திதியை ஏற்படுத்தும். வித்துவத்துவத்தில் பிரசித்தம் ஏற்படும். ஞாயிற்றுக்கிழமை சூரிய அருச்சனைசெய்ய நன்மைசெய்யும் தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். கார்த்திகைமீ 10உ 6 நாழிகை 55 விஞடிமுதல் 12உ 12 நாழிகை 51 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனம் வரவும் செலவும் சரிசமனுக இருந்துவரும். சகோதரர்களின் விசுவாசம் ஒத்துழைப்பு மகிழ்ச்சிதருவதாகும். கட்டிட சௌகரியங்களில் நவீன அமைப்பு ஏற்படும். புத்திரர் அல்லது புத்திரிக்கு ஓர் சுப விசேஷம் நடக்கும். ஜீவனேபாயத் தொழில்களில் கண்யம் மேலோங்கும். கார்த்திகைமீ 12உ 12 நாழிகை 51 விஞடி முதல் 14உ 19 நாழிகை 18 விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும், குடும்பாபி விருத்தியில் தனவரவு மதிப்பாக வந்துகொண்டிருக்கும். அதற்கு ஏற்ப,சுபகாரியசெலவினங்களும்ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஆபரண பிராப்தியையளிக்கும். வித்தியா வியாபாராதிகளில் பிரசித்த நிலைமையை உண்டுபண்ணும். புத்திரபாக்கியம் ஒன்று ஏற்படுதல் ஆகும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும் கார்த்திகைமீ 14உ 19 நாழிகை 18 விஞடிமுதல் 16உ 28 நாழிகை 32 விஞடிவரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் மூன்று விதங்களில் பண வருமானத்தை ஏற்படுத்தித் தரும். 13உ முதல் ஏழரையோன்காலமாயினும் இவ்வாண்டு குரு சஞ்சாரத்தால் நலம்பயக்கும். 20உக்கு பூர்வசொத்தினின்று கணிச

மானதொரு தொகை கைக்குவரும். எழுத்துத்துறையில் வித்தியா வியாபாராதிகளில் முன்னேற்றஸ்திதி ஏற்படும். இராஜாங்க நன்மைகளை ஏற்படுத்தும். தாரசௌக்கியம் புத்திரர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். கார்த்திகைமீ 16உ 28நாழிகை 32விநாடிமுதல் 18உ 42நாழிகை 29விநாடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். நவீன வஸ்துக்கள் வாங்குவதில் பணம் முடங்கும். சகோதரருக்குச் சௌக்கிய பலன் தரும். இயந்திர வாகன பிராப்திகளில் 13உ முதல் விருத்தி பலனை ஏற்படுத்தும். கல்வி கலைத் துறைகளிலும் அம்மான் சம்பந்தமாகவும் விசேஷ செலவினை ஏற்படுத்தும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். கார்த்திகைமீ 18உ 42நாழிகை 29 விநாடி முதல் 21உ 2 நாழிகை 20 விநாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானத்திற்கேற்ப, கௌரவச் செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். குல அபிமானத்தினால் நல்ல காரியங்களைச்செய்யும். சகோதரருக்கு இரத்த பித்த மயக்கம் வந்து உடன் குணமாகும். வீடு வாகன பிராப்தியில் சௌகரியம் சாதாரணமாக இருந்துவரும். பெற்றோருக்கு உடல்நலம் பாதித்து உடன் குணமாகும். தாரபுத்திரர் இவர்களின் நலம் நன்றாக இருந்துவரும். கார்த்திகைமீ 21உ 2 நாழிகை 20 விநாடி முதல் 25உ 27 நாழிகை 59 விநாடி வரையில் சந்திராஷ்டமம், திங்கள் செவ்வாய் சுபமாகும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும், குடும்பாபி விருத்தியில் பண வருமானம் குறிப்பிட்டிருந்த வழிகளில் வந்து சேரும். டாம்பீகமாக கௌரவச் செலவினங்களும் ஏற்படும். இதுவரையில் ஈடுபாடுகளில் இருந்த கால தாமத நிலைமை நீங்கி துரிதமாகும், சகோதரருக்கு அல்லது இராசிக்கு விபத்துள்ள நிலைமை ஏற்பட்டு, தெய்வானுகூலத்தால் விலகுவதாகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அர்ச்சனை செய்ய நலம் ஏற்படும். தார புத்திரர்களின்

சௌக்கியம் நன்ருக இருந்துவரும். கார்த்திகைமீ 23உ 27 நாழிகை 59 விஞடி முதல் 25உ 56 நாழிகை 31 விஞடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். 8உ க்குப்பிறகு ஓர் திரண்டபொருள் கைவசமாகும். சகோதரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் எழுத்துமூல காரியங்களில் 20உ அளவில் நன்மைகள் தோன்றும். கால்நடை வாகனப் பிராப்தியையளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். கார்த்திகைமீ 25உ 56 நாழிகை 31 விஞடி முதல் 28உ 25 நாழிகை 15 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼- உத்திரட்டாதி - ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் சகோதரிகளின் விசுவாசம் அனுசரணை மிச்சிரமாக இருந்துவரும், வீடு வாகனப் பிராப்தியில் அதிக சௌகரியங்களை உண்டு பண்ணும். வித்தியா வியாபாராதிகளில் ஒப்பந்தம் கெடுவில் உள்ள விஷயங்களில் நற்பயனையளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். கார்த்திகைமீ 1, 2, 3, 29உகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று இத்திருக்கோயிலுக்குவந்து சுவாமிதரிசனம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. யான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் அருளால் ஆலய நிர்வாகம் சீரும் சிறப்பும் பெற்று நன்கு இயங்கிவருகின்றது. கோயிலின் புறமும் உள்ளும் தூய்மையாய் வைக்கப்பட்டு இறை வணக்கத்திற்கு இனிமையாகவும் சுமுகமாகவும் உள்ளது. இக்கோயில் நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றியுடன் வாழ்த்தும் உரித்தாகுக.

(ஒ - ம்) அ. சோமசுந்தரம்,

23—9—79. மாவட்ட நீதிபதி, நாகப்பட்டினம்.

சிவமயம்

கார்த்திகைமாதச் சிறப்பு நாட்கள்

17—11—79 சனி, முடவன்முழுக்கு, திருவையாறுமாதப்பிறப்புதீர்த்தம், மகாப்பிரதோஷம், விஷ்ணுபதி புண்ணியகாலம்,

18—11—79 ஞாயிறு, குத்தாலம், திருப்பறியலூர், கருங்குயில்நாதன் பேட்டை ஆகிய திருத்தலங்களில் பானுவார தீர்த்தம். இவ்வாறு நான்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறும். மாதசிவராத்திரி.

19—11—79 திங்கள், திருக்கடவூர் 1008 சங்காபிஷேகம், இவ்விதம் நான்குசோமவாரங்களிலும் நடைபெறும், சர்வஅமாவாசை.

22—11—79 வியாழன், மூர்க்க நாயனர் குருபூஜை.

23—11—79 வெள்ளி, திருவண்ணுமலை தீபஉற்சவாரம்பம், சிறப்புலி நாயனர் குருபூஜை.

29—11—79 வியாழன், தருமையாதீனம் 8 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பலதேசிகபரமாசாரியசுவாமிகள் குருபூஜை, சனிப்பெயர்ச்சி.

30—11—79 வெள்ளி, தருமையாதீனம் 16 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

1—12—79 சனி, மகாப்பிரதோஷம்.

2—12—79 ஞாயிறு, பரணிதீபம், திருவண்ணுமலைதீபம், கணம்புல்ல நாயனர் குருபூஜை. தருமபுரம் ஷண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம்.

3—12—79 திங்கள், பௌர்ணமி. வேளூர்க் கிருத்திகை. சர்வ ஆலய தீபம். வைகானஸ பாஞ்சராத்திரதீபம், பௌர்ணமி விரத பூஜை, தருமையாதீனம் 18 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசிவஞானதேசிக பரமாசாரியசுவாமிகள் குருபூஜை.

10—12—79 திங்கள், கடைச்சோமவாரம், தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும், ஸ்ரீ தருமபுரீசுவரருக்கும் 108 சங்காபிஷேகம்,

11—12—79 செவ்வாய், காலபைரவாஷ்டமி, திருவையாற்றில் தீர்த்தம், ஸ்ரீ ஆட்கொண்டார் அபிஷேகம். வடமாலைக் காட்சி. திருக்கடவூர் ஸ்ரீ முனீஸ்வரபூஜை,

12—12—79 புதன், மெய்ப்பொருள் நாயனர் குருபூஜை.

13—12—79 வியாழன், ஆனய நாயனர் குருபூஜை, மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீ மேதாதக்ஷிணு மூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

14—12—79 வெள்ளி, குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் அபிஷேகம், கடைவெள்ளி ஸ்தலவிருக்ஷ பூஜை.

GNANASAMBANDAM Regd. No. ...

சனிப்பெயர்ச்சி

நிகழும் சித்தார்த்தி ஆண்டு கார்த்திகை மீ 13உ வியாழக் கிழமை உதயாதி நாழிகை 48-54க்கு (30 — 11 — 79 1 - 47 A.M) சனிபகவான் சிம்ம ராசியிலிருந்து கன்னியா ராசிக்குப் பிரவேசமாகிறார். கன்னியாராசி நட்பு வீடானதால் அந்த ராசிக்காரர்களுக்கு நன்மையே செய்வர்.

நவக்கிரகங்கள் வானவீதியில் நகர்ந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் சனிபகவான் மெல்ல ஊர்ந்துசெல்லும் கிரகமாகும். அவருக்கு ஒரு ராசியைச் கடக்க 2½ ஆண்டுகள் ஆகின்றன. 12 ராசிகளையும் கடந்து சுற்றிவர 30 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே அவருக்கு மந்தன் என்றும் சனைஸ்சரன்என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. சனி சூரியனின் குமாரர், ஆனால் அவ்விருவருக்கும் பகை. சந்திரன் செவ்வாய் கிரகங்கள் சனிக்குப்பகைக் கிரகங்களாகும். ஆகவே கடகம், சிம்மம், விருச்சிகம் என்ற இராசிகள்பகைவீடுகள். மேஷம் நீசவீடாகும். விருஷபம், மிதுனம், கன்னி, துலாம் இவை நட்புவீடாகும். மகரம், கும்பம், இவை சொந்தவீடாகும். சனி பாபக்கிரகமாயினும் இருக்கும் இடத்தைப் பொறுத்து நன்மையும் செய்வார். லக்னத்திலிருந்து 3, 6, 8, 12 இவைகளில் இருப்பாரானால் நன்மை உண்டாகும்.

கோசார பலன் அவரவர்களுக்கு அந்தந்தக் கிரகங்களின் தசாபுத்திகளின் நன்மை தீமைகளை அனுசரித்தே ஏற்படும். நல்ல தசாபுத்தியாக இருக்குமானால் சனியால் தீமைவிளையாது. ஆயினும் கிரகசஞ்சாரங்களை இயக்கிவைப்பவராகிய பரமேசுவரனை பக்தியுடன் உபாசித்தால் கிரகதோஷங்கள் நீங்கி நன்மை பெறலாம். ஆதலின் சனிப் பெயர்ச்சியன்று சனி பகவானை வழிபடுவதோடு, ஆங்காங்குள்ள திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள சிவபரம்பொருளை வழிபட்டுப் பயன்பெறுவார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager Dharmapuram Adhinam.